ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1923/7 - 2015 ජූලි මස 13 වැනි සඳුදා - 2015.07.13
*1923/7 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் ix (ஒ) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 02.

பீடைதரும் வியாபார முயற்சிகள்/அபாயகரமான வியாபார முயற்சிகள் பீடைதரும் மற்றும்
அபாயகரமான வியாபார முயற்சிகள் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் பீடைதரும் வியாபார முயற்சிகள்/அபாயகரமான வியாபார முயற்சிகள் மற்றும் அபாயகரமான வியாபார முயற்சிகளை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், பரீட்சித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடுதல் என்பவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கென இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

2. உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் இதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மீதல்லாது எந்தவொரு நபரும் பிரதேச சபை எல்லைக்குள் முதலாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பீடைதரும் வியாபார முயற்சிகள் அல்லது அபாயகரமான வியாபார முயற்சிகள் அல்லது பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சிகளை நடத்திச் செல்லல் கூடாது.

3. ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அவ்வாறான ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் அது எந்த வருடத்துக்காக வழங்கப்பட்டதோ குறித்த அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரை செல்லுபடியாகும்.

4. வியாபார முயற்சியின் சுற்றுச் சூழலிலும், குறித்த கருமத்துக்கெனப் பயன்படுத்தப்படும் கட்டடம் ஏதும் இருப்பின் அந்தக் கட்டடத்திலும், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையாத எந்தவொரு நபரும் பீடைதரும் வியாபார முயற்சி அல்லது அபாயகரமான வியாபார முயற்சி மற்றும் பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சியொன்றை நடத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.

(அ) வளவு நல்ல மறுசீரமைப்புச் செய்த நிலையிலும், நல்ல காற்றோட்ட வசதியுடன் வெளிச்சம் பெறும் வகையிலும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறையைத் திறந்ததும் அதன் தரையளவின் பதினைந்தில் ஒரு பகுதிக்குக் குறையாத அளவில் யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு அறையினதும் சுவர்களில் எல்லாப் பகுதிகளதும் உயரம் 2.14 மீற்றருக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். செங்கல், கருங்கல், கபொக் கல் அல்லது சிமெந்துக்கல் போன்றவற்றினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். சுவர்களின் உட்பகுதி தரைமட்டத்திலிருந்து குறைந்தது 2 மீற்றர் உயரத்துக்குச் சிமெந்துச் சுதை பூசப்பட்டு எஞ்சிய பகுதியில் சுண்ணாம்புச்சுதை தடவப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) ஒவ்வொரு கூரையின் மூலையும் தரைமட்டத்திலிருந்து 2 மீற்றரைவிடக்கூடிய உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) மேற்கூரை ஏதும் நிலையான பொருளைக் கொண்டு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(உ) அரிமரங்கள் அனைத்தின் மீதும் எண்ணெய்ச் சாயம் அல்லது சுண்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) முழுத்தரையும் சிமெந்தினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(எ) வளவு போதியளவு நீர் வடிந்தோடும் வண்ணம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) வளவு சுகநலக் குப்பைத் தொட்டிகளுடனும் போதுமான அளவில் மலகூட வசதிகளுடனும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. அனுமதிப்பத்திரதாரி ஒவ்வொருவரும் தமது வியாபார முயற்சியைத் தொடருவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் துர்நாற்றம் வராது அல்லது ஏனைய பீடைகள் உண்டாகாதவாறு களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரதாரி ஒவ்வொருவரும் பீடைகளை ஏற்படுத்தும் அல்லது துர்நாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படும் பொருட்களைப் பொது இடங்களிலோ அல்லது வீதிகளிலோ கொண்டு செல்லும்போது பீடைகள் ஏற்படாதவாறு மூடிமறைத்து, உறிஞ்செடுக்க முடியாத கொள்கலன்களில் இட்டு எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

7. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் ஏதேனும் உற்பத்திச் செயன்முறையின்போது வெளியேற்றப்படும் பீடைதரும் ஆவி அல்லது வாயு அங்கு பரவிச் செல்லும்போது பாதிப்பையோ அல்லது பீடையையோ ஏற்படுத்தாத வகையில் அவற்றை உயரத்தில் வளிமண்டலத்தில் விடுவித்தல் வேண்டும் ; அல்லது தீயினாலோ உருகக்கூடிய உபகரணத்தினாலோ அவற்றை அகற்றுதல் வேண்டும்.

8. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் போதியளவு வடிகான்களை அமைத்து, அவற்றை நன்கு பராமரித்தும் நாளாந்தம் கழுவியும் வருதல் வேண்டும்.

9. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் மனைத்தளத்தை உறுதியான பொருளினால் நிர்மாணித்தல் வேண்டும். மேலும், நல்ல மறுசீரமைப்புச் செய்தும் பராமரிப்புச் செய்தும் நாளாந்தம் சுத்தம் செய்தும் வருதல் வேண்டும்.

10. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் காலத்துக்குள் வருடாந்தம் வளவுக்கு வெள்ளையடித்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியின்போது பயன்படுத்தும் பாத்திரங்கள், கருவிகள் போன்ற அனைத்தையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் கழிவுப்பொருட்கள், கூட்டிப் பெருக்கும் துகள்கள், குப்பைகள் என்பவற்றுடன் வெளியேற்றப்பட்ட பொருட்கள், துணை உற்பத்திகள் என்பவற்றை உடனடியாகத் தமது தொழில் முயற்சியில் ஈடுபடுத்துவதில்லையெனில், அவற்றை மூடப்பட்ட பாத்திரங்களில் இட்டுப் பிரதேச சபை நியதிக்கமைய நாளாந்தம் வெளியேற்றுதல் வேண்டும்.

13. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தோல் அல்லது ஏனைய பொருட்களைக் கழுவ அல்லது ஊறவைக்கப் பயன்படுத்தும் தாங்கியிலிருந்து துர்நாற்றம் வீசுவதைத் தவிர்ப்பதற்காகத் தேவைக்கேற்றவாறு அவற்றை வெளியேற்றிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

14. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் ஏதேனும் ஆற்றிலோ அல்லது தண்ணீர் செல்லும் வழியிலோ, நீரோடையிலோ, வான்கதவிலோ, கிணற்றிலோ, குளத்திலோ அல்லது ஒரு வடிகானிலோ ஏதும் அழுக்கான துர்நாற்றம் வீசும் அல்லது பீடைதரும் தண்ணீரையோ அல்லது திரவத்தையோ அனுப்புவதும் வடியச் செய்வதும் அல்லது பீடைதரும் திரவத்தின் மூலம் கழுவுவதும் அல்லது வேறு வழிகளில் ஆற்றிலோ தண்ணீர் வடிந்தோடும் வழியிலோ, நீர்நிலையிலோ, வான்கதவிலோ, கிணற்றிலோ, குளத்திலோ, வடிகானிலோ அல்லது திறந்த நீர்ப்பிரதேசத்திலோ இட்டு அசுத்தமடையச் செய்தல் கூடாது.

15. தலைவர் அல்லது அந்தக் காரியத்தைச் செய்ய பொதுவாகவோ விசேடமாகவோ அதிகாரமளிக்கப்பட்ட சபையின் அலுவலரால் கடமை நேரத்தில் பீடைதரும் தொழில் முயற்சி அல்லது அபாயகரமான தொழில் முயற்சி அல்லது அபாயகரமான பீடைதரும் தொழில் முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் பிரவேசித்துப் பரீட்சித்துப் பார்ப்பது சட்டபூர்வமானதாக அமையும். மேலும் அனுமதிப்பத்திரதாரி அல்லது அவரது நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருப்பவர் அவ்வாறான பரிசீலனைக்கு இடமளித்தல் வேண்டும்.

16. அனுமதிப்பத்திரத்துக்குரிய வளவொன்று இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்கவில்லையெனப் பரிசீலனையின் போது காணப்படும் சந்தர்ப்பங்களில் உரிய வளவு இந்தத் துணைவிதிகளுக்கு அமைவானதாக ஆக்கப்படுவதற்குச் செய்யப்படவேண்டியவற்றை உரிய காலத்துக்குள் மேற்கொள்ள வேண்டுமென அனுமதிப்பத்திரதாரிக்கு எழுத்துமூல அறிவித்தலொன்றை வழங்கத் தலைவருக்கு அதிகாரமுண்டு. மேலும், குறித்த அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கமைய அனுமுதிப்பத்திரதாரி செயற்படுதல் வேண்டும். அவ்வாறு செயற்படாதவிடத்து, அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த அனுமதிப்பத்திரத்தைச் செல்லுபடியற்றதாக ஆக்கத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

17. இந்தத் துணைவிதிகளின் கீழ் ஏதேனுமொரு தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கெனத் தம்மிடம் ஒருவர் முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தை அது கிடைத்த 30 நாட்களுக்குள் குறித்த வளவு இந்தத் துணைவிதிகளுக்கு அமைவாக உள்ளதெனின், அனுமதிப்பத்திரத்தை வழங்குவதும், அல்லது நிராகரிப்பதெனின் அதற்கான காரணத்தை விண்ணப்பதாரிக்கு அறிவிப்பதும் தலைவரது கருமமாகும்.

18. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது அனுமதிப்பத்திரத்தையும் அனுமதிப்பத்திரத்துக்குரிய கைத்தொழிலிலோ அல்லது தொழிலிலோ ஈடுபட்டுள்ள ஊழியர்களது பெயர், முகவரிகளைச் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் காட்டும் பட்டியலை அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் நிலையத்தில் பகிரங்கமாகத் தெரியும் வண்ணம் தொங்க வைத்தல் வேண்டும்.

19. இந்தத் துணைவிதிகளின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு அறிவித்தலும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு உரிமையாளர் அல்லது அந்த நிலையத்தின் பொறுப்பாளரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஒருவர் இல்லாத பட்சத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பகிரங்கமாகத் தென்படும்படி தொங்கவிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறான அறிவித்தலொன்றில் நிலையத்தின் உரிமையாளர் அல்லது அங்கு செயற்படுவோரது பெயர் குறிப்பிடப்படுவது தேவையற்றதாகும்.

20. இந்தக் கட்டளைச் சட்டத்தின் 164 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் தேவைப்படும் கைத்தொழில் அல்லது தொழில் முயற்சிகள் சில ஒரே இடத்தில் நடத்திச் செல்லப்படும் சந்தரப்பத்தில் அவ்வாறு தனித்தனியாக ஒவ்வொரு கைத்தொழில் முயற்சிக்குமெனச் செலுத்தப்படவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம். குறித்த கைத்தொழில் அல்லது தொழில் முயற்சிக்கெனப் பயன்படுத்தும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் தனித்தனியாக அறவிடப்படுதல் வேண்டும்.

21. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்சத் தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது

அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

22. 21ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டப்பணம் பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

23. சொற்பதங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணைவிதிகளில் -

''அனுமதிப்பத்திரதாரி'' என்பது, இந்தத் துணைவிதியின் கீழ் தொழில் முயற்சியை நடத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் ஒருவரையும் ;

''நபர்'' என்பது, கூட்டுச்சேர்க்கப்பட்ட அல்லது அவ்வாறு செய்யப்படாத ஆட்கள் குழுவையும் ;

''நிர்வாகப் பொறுப்பாளர்'' என்பது, பொறுப்பாளர், பாதுகாப்பாளர், சொத்துக்களைப் பாதுகாப்பவர், முகாமையாளர் அல்லது ஏதேனும் ஒருவருக்காகக் குறித்த ஒரு தொழில் முயற்சியின் ஏற்பாடு, நிர்வாகம் அல்லது முகாமை சாட்டப்பட்டுள்ள ஒருவரையும் ;

''சபை'' என்பது, உடபலாத்த பிரதேச சபையையும் ;

''தலைவர்'' என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும்

''பிரதேச சபைப் பிரதேசம்'' என்பது, உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட எல்லையையும் ;

''அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையின் அலுவலர்'' என்பது, தலைவரின் இந்தத் துணைவிதிகளைச் செயற்படுத்துவதற்கென அதிகாரம் வழங்கியுள்ள அலுவலர் அல்லது அலுவலர்களையும் குறிப்பிடும்.

24. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகர்களிடையே ஏதும் கருத்துச் சிதைவுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை - 01**

பீடைதரும் தொழில் முயற்சிகள் :

1. உரம் அல்லது இரசாயனப் பசளை வகையை உற்பத்தி செய்வது அல்லது களஞ்சியப்படுத்தி வைப்பது.
2. தோல் பதனிடுதல்.
3. தோல் விற்பனை செய்வது.
4. கால்நடை வளர்ப்பு (இறைச்சிக்காக, பாலுக்காக, முட்டைக்காக).
5. புகைப்பட நிலையமொன்றை நடத்துதல்.
6. கால்நடை மருந்தகம் நடத்துதல்.
7. விற்பனைக்காகப் பழுதடைய இடமுள்ள உணவுவகைகளையோ அல்லது உணவுப் பொருட்களையோ களஞ்சியப்படுத்தி வைத்தல்.
8. கருவாடு, உப்புமீன் அல்லது ஜாடி 150 கிலோகிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
9. சிரட்டைக்கரி அல்லது விறகுக்கரி தயாரித்தல் அல்லது கரியைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
10. புகையிலை பதப்படுத்துதல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்துதல்.
11. விலங்கு உணவு உற்பத்தியும் விலங்கு உணவுக் களஞ்சியமும் நடத்துதல்.
12. புண்ணாக்கு தயாரிப்பு அல்லது 200 கிலோ கிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
13. சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.

14. விலங்குகளின் எலும்பு அரைப்பது அல்லது வைத்திருப்பது.
15. புதிய அல்லது பழைய உலோகங்களைக் களஞ்சியம் வைத்திருத்தல்.
16. உலோக கழிவுப் பொருட்களின் களஞ்சியம் நடத்துதல்.
17. வீட்டுத் தளபாட உற்பத்தியும் களஞ்சியமும் நடத்துதல்.
18. பிரம்புப் பொருட்கள் தயாரிப்பு.
19. தச்சுத் தொழிற்கூடம் நடத்துவது.
20. பழப்பாகு அல்லது பானம் தயாரித்தல்.
21. இனிப்பு வகைகள் தயாரித்தல்.
22. தென்னை மட்டையை ஊறவைத்தல் (அவியச் செய்தல்).
23. தூரிகை தயாரித்தல் (பற்தூரிகை தவிர்ந்த).
24. பற்தூரிகை உற்பத்தி.
25. கள் வடித்தல்.
26. வினாகிரித் தயாரிப்பும் களஞ்சியமும்.
27. பொறிமுறையினாலோ அல்லது கையினாலோ மரம் கிழிக்கும் நிலையம் நடத்துதல்.
28. அச்சு மை, பூச்சு மை, வார்னிஷ் அல்லது டிஸ்டெம்பர் சாயம் அல்லது 100 இலீற்றரைவிட அதிகம் களஞ்சியப்படுத்துதல்.
29. சோடா உற்பத்தி.
30. தோல்பொருட்கள் தயாரிப்பு.
31. பழவகை, மீன் அல்லது ஏனைய உணவு வகைகளைத் தகரத்தில் அடைத்தல்.
32. மிளகாய், கோப்பி, தானியங்கள், அவரைப்பயிர்கள், கறிச்சரக்குப் பொருட்கள் அல்லது மா அரைக்கும் ஆலையை நடத்துதல்.
33. மெழுகுதிரி உற்பத்தி செய்தல்.
34. கற்பூர உற்பத்தி.
35. எழுத்துமை, அச்சுமை, ஸ்டென்சில் மை தயாரிப்பு.
36. ஆடை கழுவும் நீலத் தயாரிப்பு.
37. அரக்கு உற்பத்தி.
38. வாசனைத் திரவியங்களின் உற்பத்தியும் களஞ்சியமும்.
39. பாடசாலை வெண்கட்டித் தயாரிப்பு.
40. டயர் அல்லது டியூப் 50 இலும் அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
41. டயர் மீள நிரப்புதல்.
42. டயர், டியூப் வொல்கனைசுப்படுத்தும் நிலையம் நடத்துதல்.
43. 1000 கிலோகிராமுக்கு அதிகமாகச் சிமெந்து களஞ்சியம் நடத்துதல்.
44. சிமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பெஸ்டோஸ் சிமெந்துப் பொருட்கள் தயாரித்தல்.
45. பிளாத்திக் பொருட்கள் உற்பத்தி.
46. விசைத்தறி நிலையம் நடத்துதல்.
47. பசளை, சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்கள் இட்டுவைத்த கோணிப்பைகளைச் சுத்தமாக்கி விற்பனை செய்தல்.
48. பொறிமுறையில் சிமெந்து அச்சுக்கல் தயாரித்தல்.
49. தானியங்கள் அல்லது அவரையினங்களில் 250 கிலோகிராமைவிட அதிக அளவில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.

**அட்டவணை - 02**

*அபாயகரமான தொழில் முயற்சிகள் :*

1. மொத்த வியாபாரத்துக்கென மா, உப்பு, சீனி என்பவற்றை 750 கிலோகிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
2. தைத்த ஆடைகள் தயாரிப்பு.
3. அச்சகம் ஒன்றை நடத்துதல்.
4. 100இற்கு மேற்பட்ட கோழிகளைக் கொண்டுள்ள கோழிக்கூடு அல்லது கோழிப்பண்ணை நடத்துதல்.
5. 10 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் ஆடு, பன்றிக் கொட்டில் அல்லது பண்ணையை நடத்துதல்.

6. செங்கல் அல்லது ஓடு களஞ்சியப்படுத்த வைத்தல்.
7. விறகுக் களஞ்சியம் நடத்துதல்.
8. இயந்திரத்தினால் அல்லது கையினால் கருங்கல் அகழ்தல் அல்லது உடைத்தல்.
9. குளிர்பான உற்பத்தி அல்லது 100 இற்கும் மேற்பட்ட குளிர்பான போத்தல்களைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
10. ஐஸ்கிறீம் தயாரிப்பு.
11. தேங்காயெண்ணெய்த் தயாரிப்பு அல்லது 300 லீற்றரைவிட அதிகம் களஞ்சியப்படுத்துதல்.
12. தீப்பெட்டி உற்பத்தி அல்லது 100 டசினுக்கு மேற்பட்ட அளவில் களஞ்சியம் செய்தல்.
13. தும்பு அல்லது ஏனைய நார்களால் பொருட்கள் செய்வதும் களஞ்சிப்படுத்துதலும்.
14. பாவிக்கப்பட்ட உடுதுணி வகைகளைக் களஞ்சியப்படுத்துதல்.
15. தங்க நகைத் தயாரிப்பும் திருத்த வேலையும்.
16. பொறிமுறை மரம் அரிதல்.
17. பொறிமுறைப் பட்டறை வேலைத்தளம் நடத்துதல்.
18. வெற்றுக் கோணிப்பை, வெற்றுப்போத்தல் களஞ்சியம் நடத்துதல்.
19. மிதிவண்டி, மோட்டார் சைக்கிள் திருத்தும் வேலைத்தளம்.
20. பழைய பேப்பர் களஞ்சியம் நடத்துதல்.
21. விசிறும் சாயம் - ஸ்பிறே பெயிண்டிங் - பூசும் நிலையம் நடத்துதல்.
22. வாணவேடிக்கை மற்றும் பட்டாசுக் களஞ்சியம் நடத்துதல் அல்லது தயாரித்தல்.
23. தேங்காயெண்ணைய் தவிர ஏனைய காய்கறி எண்ணெய் 50 இலீற்றரைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்துதல்.
24. குளிரூட்டிய இறைச்சி, மீன் களஞ்சியம் நடத்துதல்.
25. அரிமரக் களஞ்சியம் நடத்துதல்.

### அட்டவணை - 03

பீடைதரும் மற்றும் அபாயகரமான தொழில் முயற்சிகள் :

1. இரசாயனங்களைப் பயன்படுத்தி கறுவா, ஏலம், கராம்பு அல்லது நார் வகைகளைப் பதப்படுத்துதல்.
2. சாயமூட்டுதல் அல்லது உலர் சலவை செய்தல்.
3. துணி அச்சிடுதலும் சாயமூட்டுதலும்.
4. மின்னியல் முலாம் பூசும் நிலையம் நடத்துதல்.
5. சுண்ணக்கல் அல்லது முருகைக்கல் சுடுதல், தயாரித்தல் அல்லது நீற்றுச் சுண்ணக் களஞ்சியம் நடத்துதல்.
6. பற்றரி மின்னேற்றம் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் நிலையம்.
7. மோட்டார் வாகனம் திருத்தும் நிலையம் நடத்துதல்.
8. மோட்டார் வாகனம் சேர்விஸ் பராமரிப்பு நிலையம் நடத்துதல்.
9. தகர வேலைத்தளம் நடத்துதல்.
10. திரவவாயுக் கொள்கலன் களஞ்சியம் நடத்துதல்.
11. ஆயுர்வேத மருந்து, தேசிய மருந்துகள் தயாரிப்பு அல்லது கலவை செய்தல்.
12. கண்ணாடியும் கண்ணாடித் தகடும் களஞ்சியப்படுத்தல்.
13. பிளாத்திக் அல்லது கண்ணடியிழைத் தொழிற்சாலை நடத்துதல்.
14. 150 கிலோகிராமைவிட அதிகமாக தேயிலைத்தூள் களஞ்சியம் நடத்துதல்.
15. காய்ச்சி ஒட்டும் வேல்டிங் பட்டறை நடத்துதல்.
16. கடைசல் பட்டறை நடத்துதல்.
17. பெற்றோல், தீசல் எண்ணெய் அல்லது ஏனைய கனியநெய் வகைகளின் களஞ்சியம் நடத்துதல்.
18. விவசாய இரசாயனப் பொருட்கள் தயாரிப்பும் களஞ்சியமும்.
19. வளிசீராக்கி, குளிரூட்டி, அதிகுளிரூட்டி திருத்தவேலை நிலையம்.
20. மின்னியல் தொழில் அல்லது மின் உபகரணங்கள் தயாரிப்பு அல்லது திருத்த வேலை நிலையம் நடத்துதல்.
21. பால் குளிரூட்டும் நிலையம் நடத்துதல்.

7- 1293/ 1

**மத்திய மாகாண மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (iii) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 02.

வரி அறவிடுவது சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் எல்லா வர்த்தக நிலையங்கள் மற்றும் கைத்தொழில்கள் சம்பந்தமாக வரி அறவிடுவதற்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.

2. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் எல்லா வர்த்தக நிலையங்கள் மற்றும் கைத்தொழில்கள் சம்பந்தமாக வரி அறவிடும் கருமங்களுக்கெனத் தேவைப்படும் கணக்கு அறிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான தவணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதை முறைப்படுத்துவதற்கென விதிக்கப்படுகின்றன.

3. உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள எல்லா வர்த்தக, வியாபார, இயக்கங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைகளுக்கமையத் தெளிவான கணக்கு அறிக்கைகளைப் பேணிவருதல் வேண்டும்.

4. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் வேண்டப்படும் அனைத்து நிதி மற்றும் கணக்குகளுக்குரிய தகவல்களை வழங்குதல், பிரதிகளை வழங்குதல் என்பன வர்த்தக வரிக்கு உட்படும் ஒருவரது கடமையாக அமையும்.

5. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் காலத்துக்குக் காலம் வேண்டப்படும் அனைத்து வர்த்தகத் தகவல்கள், நிதி மற்றும் கணக்குகள் பற்றிய அறிக்கைகள் என்பவை கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு அமையத் தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

6. மேற்குறித்த 5 ஆவது துணை விதியின் கீழ் முன்வைக்கப்படும் அனைத்து நிதித் தகவல்களும் கணக்கறிக்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரால் பரிசீலிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

7. உடபலாத்த பிரதேச சபையின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் விடுக்கப்படும் அறிவித்தல் கிடைத்த எவரேனும், குறித்த அறிவித்தல் தமக்குக் கிடைத்த 14 நாட்களுக்குள் அதில் வேண்டப்பட்டுள்ள தகவல்களைச் செயலாளரிடம் முன்வைத்தல் வேண்டும்.

8. பிழையான தகவல்களை வழங்குவதோ அல்லது தகவல்களை வெளியிடாது இருத்தலோ குற்றமாகக் கருதப்படும்.

9. மேற்குறித்த 5 ஆம் துணை விதியின் கீழ் கேட்கப்படும் தவணை அறிக்கைகளுக்கமையத் தகவல்களைப் பரிசீலிப்பதற்குத் தேவைப்படின், உரிய வர்த்தக நிலையம், தொழிற்சாலையின் வளவுக்குள் வந்து தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் குறித்த ஏடுகளின் மெய்த்தன்மையைப் பரிசீலிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

*10.* இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆவது ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டனைக்கும் உட்படுதல் வேண்டும்.

*11.* 10 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத்தொகை பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

*12.* பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :-

"தலைவர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும்,

"சபை" என்பது, உடபலாத்த பிரதேச சபையையும்,

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் குறிப்பிடும்.

*13.* இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7 - 1293/2

---

**மத்திய மாகாண, மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் xi (அ) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 02.

விலங்குப் பண்ணைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் இறைச்சிக்காக, பாலுக்காக அல்லது முட்டைக்காக அல்லது விலங்கு இனப்பெருக்கத்துக்காக நடத்தப்பட்டுவரும் விலங்குப் பண்ணைகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துதல், நிர்வகித்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நடத்தப்பட்டு வரும் விலங்குப் பண்ணைகள் அனைத்தையும் மக்களுக்கும், சுற்றாடலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்தில் சுகாதாரமான முறையில் நடத்திச் செல்வதும், பீடைகளில்லாமலும், வதை செய்யாமலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிர்ணயங்களுக்கு அமைய நடத்திச் செல்வதுமே இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுவதன் நோக்குமாகும்.

3. தலைவரால் உரிய கருமத்துக்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மீது அல்லாது, எவரும் எந்தவொரு விலங்குப் பண்ணையையும் இறைச்சிக்காக, பாலுக்காக அல்லது முட்டைக்காக அல்லது விலங்கு இனப்பெருக்கத்துக்காக நடத்திச் செல்லக் கூடாது.

4. இரண்டாவது துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்த வருடத்துக்கென வழங்கப்பட்டதோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும்.

5. ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது பிரிவின் கீழ் அறவீட்டுக்கு உட்படும். இந்தக் கட்டணத்தைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும். திருத்தப்பட்ட இந்தக் கட்டணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் செயற்பாட்டுக்கு வரும்.

6. அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் எவரேனும் ஒருவர் நிர்வாக எல்லைக்குரிய மிருக வைத்தியரது விதப்புரையுடன் முன்வைத்தல் வேண்டும். இந்தத் துணைவிதியின் அட்டவணைக்கு அமைய விண்ணப்பப்படிவத்தை முன்வைத்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு விலங்குப் பண்ணை அனுமதிப்பத்திரத்திலும் "அனுமதிப்பத்திரம் பெற்ற விலங்குப் பண்ணை" என அனுமதிப்பத்திரதாரியின் பெயரைத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தெளிவாகப் பெயின்ட் செய்துள்ள பெயர்ப்பலகையைத் தமது விலங்குப் பண்ணையின் வெளிப்பகுதியில் நன்கு தென்படும் வண்ணம் தொங்கவிடுதல் வேண்டும்.

8. விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரி, தமது பண்ணையினதும் அதன் ஒவ்வொரு கட்டடத்தின் எல்லாச் சுவர்களிலும் தூண்களிலும் வண்ணப்பூச்சு பூச ஏற்பாடு செய்தல் வேண்டும்.

9. விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் தமது பண்ணையையும், அதன் அனைத்துக் கட்டடங்களையும் திருத்த வேலைக்கு உட்படுத்தி, சுத்தமாகவும், சுகாதாரமானதாகவும் வைத்து, நாளாந்தம் கழுவிக் கூட்டவும் செய்தல் வேண்டும்.

10. விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் தமது இடத்தைச் சுத்தமாகவும் சுகாதாரமானதாகவும் வைத்திருக்கவென விலங்குகளின் மலம், மூத்திரம் மற்றும் கழிவுப்பொருட்களை நாளாந்தம் மற்றும் அடிக்கடி குறுகிய கால எல்லைக்குள் ஒரு தடவையென சேகரிக்கச் செய்து, அவ்வாறு சேகரிக்கப்பட்ட விலங்குகளது மலம், மூத்திரம் மற்றும் கழிவுப்பொருட்களை ஏதும் நிலையான பொருட்களால் தயாரிக்கப்பட்ட மூடியுடனான கொள்கலனில் அல்லது சிமெந்துப் பூச்சினால் மெழுகப்பட்ட, இடவசதியுள்ள குழியினுள் இடுதல் வேண்டும்.

11. விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் அனைத்துக் கழிவுப் பொருட்களையும், மலம், மூத்திரம் என்பவற்றைக் கழுவிய நீரையும் நாளாந்தம் குறைந்தது ஒரு தடவையேனும் அகற்றச் செய்து, அதன் மூலம் பீடைகள் ஏற்படாத வண்ணம் வெளியேற்ற ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

12. விலங்குப்பண்ணை ஒன்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் குறைந்தது 3 மாதத்துக்கு ஒரு தடவையேனும் தமது பண்ணையின் ஒவ்வொரு விலங்கையும் அரசாங்க மிருக வைத்தியரது பரிசோதனைக்கு உட்படுத்திப் பெறப்பட்ட அறிக்கையைத் தம்மிடம் வைத்திருத்தல் வேண்டும். மிருக வைத்தியர் ஏதும் விதப்புரையைச் செய்திருந்தால், உடனடியாக அதனை நிறைவேற்றுதல் வேண்டும்.

13. விலங்குப் பண்ணையில் உள்ள விலங்குக்கோ அல்லது விலங்குகளுக்கோ ஏதும் நோய்கள் அல்லது தொற்று நோய்கள், நோய் பரவும் தன்மை ஏற்படுமெனின், பண்ணைக்குள் அந்த விலங்குகளை வேறாக்கி வைக்கக்கூடிய வகையில் பண்ணைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

14. மேற்குறித்த 13 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிலை பண்ணைக்குள் ஏற்படுமிடத்து, அதுபற்றி மிருக வைத்தியருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

15. விலங்குப் பண்ணைக்குள் விலங்குகளை வைத்திருக்கும் சந்தர்ப்பங்களில், எந்தவொரு விலங்கை அறுப்பதும், அதற்கு வதைகள் செய்வதும் கூடாது.

16. விலங்குப் பண்ணைக்குள் ஏதும் நோயினால், தொற்று நோயினால் அல்லது நோய் பரவும் தன்மையினால் இறந்துபோகும் விலங்குகளது இறைச்சியை மனித நுகர்வுக்குப் பயன்படாத விதத்தில் அழித்து விடுதல் வேண்டும்.

17. தலைவர் அல்லது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் அலுவலரால் விலங்குப்பண்ணை ஒன்றினுள் நியாயமான எந்த வேளையிலும் உட்புகுந்து அதனைப் பரிசோதிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

18. தலைவர் அல்லது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குப் பண்ணைக்குள் புகுந்து பரிசோதனை செய்வதற்கு அனுமதிப்பத்திரதாரி அல்லது விலங்குப்பண்ணைப் பொறுப்பாளர் இடமளித்தல் வேண்டும். தலைவருக்கோ அல்லது அவ்வாறான அலுவலருக்கோ தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

19. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

20. 19 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டப் பணம் பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

21. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம்:

"சபை" என்பது, உடபலாத்த பிரதேச சபையையும் ;

"தலைவர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,

"விலங்குகள்" என்பது, இறைச்சிக்காகவோ, பாலுக்காகவோ அல்லது முட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவோ அல்லது இனப்பெருக்கத்துக்காகவோ வளர்க்கப்படும் விலங்குத் தொகுதியையும் குறிக்கும்.

22. இந்தத் துணைவிதிகளின் சிங்களம், தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 1293/3

**மத்திய மாகாண மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் x (அ) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2015, பெப்புருவரி 02.*

திரிந்து சென்று செய்யும் வியாபாரம் தொடர்பான துணைவிதிகள்

*1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் திரிந்து சென்று வியாபாரம் தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் திரிந்து சென்று வியாபாரம் செய்வதை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்காக விதிக்கப்படுகின்றன.*

*3. உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் குறித்த கருமத்துக்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரும் எந்தவொரு வீதியிலோ, பாதையிலோ, பொது மைதானத்திலோ, பொதுப் பூங்காவிலோ மற்றும் வண்டி அல்லது மோட்டார் வண்டி நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலோ அல்லது பயன்படுத்தப்படும் பொது வாகனத் தரிப்பிடத்திலோ அல்லது பொது பஸ் தரிப்பிடத்திலோ எந்தவொரு பண்டத்தையும் விற்பனை செய்தல், விற்பனைக்காக வைத்திருத்தல் அல்லது விற்பனைக்கென அங்குமிங்கும் எடுத்துச் செல்லுதல் கூடாது.*

*4. வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தின் மீதும் பொருத்தமெனக் கருதப்படும் நிபந்தனை அல்லது நிபந்தனைகளை விதிப்பதற்குத் தலைவருக்கு அதிகாரமுண்டு.*

*5. தகுதியான நீதிமன்றத்தின் மூலம் செல்லுபடியற்றதாக ஆக்கப்படும் அனுமதிப்பத்திரத்தை உடனடியாகத் தலைவரிடம் திருப்பிக் கையளித்தல் வேண்டும்.*

*6. தகுதியான நீதிமன்றம் செல்லுபடியற்றதாக ஆக்கினாலன்றி, ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் அது எந்த வருடத்துக்கென வழங்கப்பட்டதோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதத்தின் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாகும்.*

*7. திரிந்து விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் தாம் வர்த்தகம் செய்யும் நேரங்களில் தலைவரால் வழங்கப்பட்ட அறிமுக அட்டையைத் தெளிவாகத் தெரியும் வண்ணம் அணிந்திருத்தல் வேண்டும்.*

*8. தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் தமது அடையாள அட்டையையும் அனுமதிப்பத்திரத்தையும் முன்வைக்கும்படி கேட்கும்போது அவற்றை உடனடியாக முன்வைப்பது திரிந்து விற்பனை செய்யும் ஒருவரது கடமையாக அமையும்.*

*9. அனுமதிப்பத்திரம் பெற்ற திரிந்து விற்பனை செய்யும் ஒருவர் முற்பகல் 6.00 மணியிலிருந்து பிற்பகல் 10.00 மணி வரை தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட உரித்துடையவராவார். எனினும், குறித்த கால எல்லைக்கு அப்பாலும் வியாபாரம் செய்வதற்கென அனுமதி வழங்கப்பட்டு, அது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள நேரம் வரை வியாபாரம் செய்ய அனுமதிப்பத்திரதாரிக்கு உரிமையுண்டு.*

*10. அனுமதிப்பத்திரதாரி தொற்று நோயால் பீடிக்கப்பட்டிருப்பின், வியாபார நடவடிக்கைகளை அவர் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.*

*11. உணவுப் பொருட்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டிருக்கும் திரிந்து விற்கும் வியாபாரி ஒருவர் பின்வரும் ஏற்பாடுகளுக்கமைய நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

I. *விற்பனைக்கெனக் கொண்டு செல்லும் உணவுப்பொருட்களில் ஈக்கள் மொய்ப்பதைத் தடுக்கவும், மற்றும் தூசு அழுக்குகள் துர்நாற்றம் போன்ற சேருவதைத் தடுக்கவும் ஏற்ற வகையில் அவற்றை வைத்திருத்தல் வேண்டும். உணவுப் பொருட்களை ஆட்கள் தொட்டுப் பார்ப்பதற்கும் இடமளித்தல் கூடாது.*

II. *உணவுப்பொருட்களை வைத்திருக்கும் வாகனம், மிதிவண்டி, வண்டி, பாத்திரம் அல்லது தட்டம் என்பவற்றுடன் பரிமாற்றப்படும் உல்லா உபகரணங்களும் நிதமும் சுத்தமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.*

III. *உணவுப் பண்டங்களைச் சுற்றுவதற்காகப் பயன்படுத்தும் கடதாசி அல்லது அது போன்றவை சுத்தமாகவும், அதற்கான பொருத்தமான நிலையிலும் இருத்தல் வேண்டும்.*

IV. *உணவுப்பண்டங்களைப் பரிமாறுவதற்கென சுத்தமான உபகரணங்களையும் கருவிகளையும் பயன்படுத்துதல் வேண்டும்.*

V. *உணவுப்பண்டங்களை விற்பனை செய்வதில் தொற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ளவரை ஈடுபடுத்துதல் கூடாது.*

VI. *எவருக்கேனும் அபாயம் அல்லது தொந்தரவு விளைவிக்கும் விதத்தில் நெருப்பைப் பயன்படுத்துதல் கூடாது.*

VII. *கழிவுப்பொருட்களையோ அல்லது கழிவு நீரையோ பொது இடங்களில் இடுதல் கூடாது. அவை சுகாதாரமான பாதுகாப்பான முறையில் தலைவர் திருப்திப்படக்கூடிய முறையில் அகற்றப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

*12. ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்கு அல்லது விலங்குகளது இறைச்சியைக் கொண்டு திரிந்து விற்கும் ஒருவர் விற்பனை செய்தல் கூடாது.*

*13. ஏதும் தொற்று நோய் அல்லது பயங்கர நோய்கள் பரவியிருக்கும் அல்லது பரவிய இடங்களில் சமைத்த உணவுப் பண்டங்களைக் கொண்டு திரிந்து விற்பனை செய்பவர் விற்பனை செய்வதைத் தலைவர் தடை செய்தல் வேண்டும்.*

*14. பொதுச் சந்தை வளவுக்குள் திரிந்து சென்று விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.*

*15. ஏதேனும் ஓரிடத்தில் நெடுநேரம் தரித்திருந்து அனுமதிப்பத்திரிதாரி விற்பனை செய்யக்கூடாது.*

*16. மேற்காட்டிய துணைவிதிகளின் நியமங்களை மீறும் ஒவ்வொருவரும் குற்றவாளியாகுவதுடன், உரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில் அவர் குற்றவாளியாக்கப்பட்டால், விதிக்கப்படும் உச்ச அளவுத் தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும். மேலும் அதே குற்றத்தைத் தொடர்ந்தும் செய்பவராகக் காணப்பட்டால், குற்றவாளியாகக் கருதப்படும் ஒவ்வொரு நாளைக்குமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின் கீழ் விதிக்கப்படும் மேலதிக தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.*

17. 16 ஆவது துணைவிதியின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப் பணம் பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

18. இந்தத் துணைவிதிகள் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி,

''உணவுப் பொருட்கள்'' என்பது, மனித நுகர்வுக்காக எடுக்கப்படும் உணவு வகைகளையும் பான வகைகளையும் குறிப்பிடும்.

''திரிந்து சென்று விற்பனை செய்வது'' என்பது, தாம் அல்லது விலங்கினது உதவியுடன் அல்லது வாகனத்தில் பொருட்களைக் கொண்டு சென்று மேற்கொள்ளப்படும் வியாபாரம் எனவும் கொள்ளப்படுவதுடன், தனியாள் ஒருவர் மேற்கொள்ளும் மொத்த வியாபாரம் இதில் அடங்காது.

19. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7 - 1293/4

---

**மத்திய மாகாண மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (xxx) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 02.

அறிவித்தல் பலகைகள் தொடர்பான துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் ஏதேனும் ஒரு பாதைக்குத் தென்படும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், அவ்வாறு பிரசாரம் செய்யும் விளம்பர அறிவித்தல்களுக்கெனக் கட்டணங்களை அறவிடுதல் என்பன பற்றிய துணைவிதிகள் எனப்படும்.

2. .இந்தத் துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

3. எந்தவொரு பாதையிலும் தென்படும் வண்ணம் எந்தவித விளம்பர அறிவித்தலையும் உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்துடனன்றி எவரும் காட்சிப்படுத்துதல் அல்லது காட்சிப்பட வைத்தல் கூடாது.

4. விளம்பர அறிவித்தல் எனப்படுவது பிரதான வீதியில், சிறிய பாதையில், மாகாண சபை பிரதேச சபை அல்லது தனிப்பட்ட பாதையில் தென்படும் வண்ணம் பலகைகள், பதாதைகள், கட்அவுட்கள், அலுமினியத் தகடுகள், உருக்குத் தகடுகள், பொலித்தீன், துணி, கடதாசி போன்ற தகடு, துணி அல்லது கடதாசிகளில் வரைந்து அல்லது கல்வனைசு இரும்பு போன்றவற்றினால் தயாரிக்கப்பட்ட அறிவித்தல் பலகையை வீடு, கடை, ஹோட்டல், சுவர், மதில் போன்றவற்றின் மீது எழுத்துக்களால் தமது வர்த்தக நிலையம், வியாபாரப் பொருள், வர்த்தகக் கண்காட்சி, களியாட்டம் போன்ற விழாக்களில் பயன்படுத்தும் விசேட அறிவித்தல்களும் அடங்கும்.

5. எவ்வகையான விளம்பரத்தையும் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை ஐந்தாவது துணைவிதிக்கமைய உரிய விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்த உத்தேசித்துள்ள திகதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் சபையின் தலைவரிடம் முன்வைத்தல் வேண்டும்.

6. நான்காவது துணைவிதியின் கீழ் முன்வைக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் ;

(ஆ) விளம்பரத்தைக் காட்சிப்படுத்த உத்தேசித்துள்ள ஆக்கத்தின் அளவுக்குச் சமமான அளவுத் திட்டத்தில் வரையப்பட்ட நில வரைபடம் ;

(இ) 1:1,000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட குறித்த ஆக்கத்தின் உரு ;

(ஈ) குறித்த திட்டத்தில், உருவில் அல்லது மாதிரியுருவில் இந்தத் துணைவிதிகளுக்கமைய மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் ஏதும் இருப்பின், அவை ;

(உ) காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தலில் பயன்படுத்தப்பட்ட நிறங்கள் அனைத்தையும் கொண்டுள்ள சிறிய அளவில் வரையப்பட்ட விளம்பரத்தின் மாதிரி ;

(ஊ) அடுத்துள்ள வீதிகள் மற்றும் பிரதாரண தரை அடையாளங்கள் என்பவற்றுடன் விளம்பரத்தின் அமைவிடத்தைக் காட்டும் திட்ட வரைபடம்.

(எ) சபையின் தீர்மானமொன்றின் மூலம் நிறைவேற்றப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டணம் ;

(ஏ) குறித்த விளம்பரத்தை காட்சிப்படுத்தும் அங்கீகாரத்தை வழங்குவதற்கெனப் உடபலாத்த பிரதேச சபைக்குத் தேவைப்படும் ஏனைய தகவல்கள்.

7. உடபலாத்த பிரதேச சபைத் தலைவரால் எழுத்துமூலம் அனுமதி வழங்கப்பட்ட வரைபடத் திட்டங்களுக்கும் வரைபுகளுக்கும், முன்வரைபுகளுக்கும் அமைய நிர்மாணிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல்களைத் தவிர எவரேனும் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் ஏதும் விளம்பர அறிவித்தலை அல்லது அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தும் எந்தவொரு பலகையையோ, அறிவித்தல் பலகையையோ அல்லது வேறேதும் ஆக்கங்களையோ நிர்மாணித்தல் அல்லது நிர்மாணிக்கச் செய்தல் கூடாது.

8. 4 ஆவது துணைவிதியின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் அங்கீகரிக்கப்படும் தருணத்தில், குறித்த வருடத்தில் கட்டணம் அறவிடுவது தொடர்பாக குறித்த கட்டணத்தைச் செலுத்தும் வரை விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடாது. அந்த வர்த்தகரது இடத்தின் பெயர்ப்பலகை, அதன் பருமன் என்பவற்றை நகர சபை தீர்மானிக்கும்.

9. விளம்பர அறிவித்தல் ஒன்றைக் காட்சிப்படுத்துவதற்கென எவரேனும் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரால் காட்சிப்படுத்தப்படும் ஒவ்வொரு அறிவித்தலிலும் அனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டுமென உடப்பலாத்த பிரதேச சபை அவர்களைக் கேட்டுக்கொள்ளல் வேண்டும்.

10. இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகள் பின்வரும் விளம்பரங்கள் எதற்கும். அவை மின்னொளி பாய்ச்சும் விளம்பர அறிவித்தல் அல்லது வான்வழி பெயர்ப்பலகையாக இருந்தாலொழிய பொருந்தாது ;

(அ) பெறப்படும் தேறிய அளவு புண்ணிய கருமங்களில் ஈடுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புள்ள விளம்பர அறிவித்தல்கள் ;

(ஆ) ஏதுமொரு நிகழ்ச்சியை நடத்துமிடத்தல், குறித்த நிகழ்ச்சியைப் பிரசித்தப்படுத்தும் விளம்பர அறிவித்தல்கள் ;

(இ) சமய, அரசியல் பொதுக்கூட்டங்கள் தொடர்பான விளம்பர அறிவித்தல்கள் ;

(ஈ) ''வாடகைக்கு உண்டு'' எனக் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள் ;

(உ) ''விற்பனைக்கு உண்டு'' எனக் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள் ;

(ஊ) வீட்டுப் பெயர்ப்பலகை (அதன் அளவைச் சபை தீர்மானிக்கும்) ;

(எ) தொழில்சார் நடவடிக்கைகளில் பயன்படுத்தும் 0.93 சதுர மீற்றரைத் தாண்டாத பெயர்ப்பலகைகள் ;

(ஏ) வியாபார அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் வாகனத்தில் குறித்த வர்த்தகம் அல்லது வியாபாரம் தொடர்பாக அதன் தன்மையையும் உரிமையாளரது பெயர், முகவரி, தொலைபேசி அல்லது டெலெக்ஸ் இலக்கம் என்பவற்றைக் காட்டும் விளம்பர அறிவித்தல்கள்.

11. எவரேனும் ஒருவர் -

I. ஒரு வீதியில், தெருவில் அல்லது நடைபாதையில், வாகன வழியின் மேல் அல்லது குறுக்காக நீட்டிக்கொண்டிருக்கும் வண்ணம் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல் ;

II. தரையிலிருந்து 15 மீற்றரைத் தாண்டும் உயரத்தில் ஏதும் பலகைகளில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல் ;

III. ஏதேனுமொரு வீதியை அல்லது பாதையை எதிர்நோக்குமாறு அமைந்துள்ள கட்டடத்தின் முகப்பில் வர்த்தக நிலையத்தின் பெயர்ப்பலகை அல்லது கட்டடத்தின் முற்பக்க எல்லையைத் தாண்டிச் செல்லும் நீளத்தில் விளம்பர அறிவித்தலைப் பொருத்துதல் அல்லது தொங்கவிடுதல் ;

IV. வான்வழி விளம்பரங்களைப் போன்ற விளம்பர அறிவித்தலைக் உடபலாத்த பிரதேச சபையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது எவ்வகையிலேனும் அமைத்தல், செய்தல் என்பன கூடாது.

12. எவரேனும் ஒருவர் தனிப்பட்ட அல்லது பொதுக் கட்டடமொன்றில், பொதுப் புண்ணியத்தலத்தில், பொது விளையாட்டு மைதானத்தில், பொதுப் பூங்காவில் அல்லது பாலமொன்றில் அல்லது பாதையிலுள்ள வழிப் பாலமொன்றில், தொலைபேசி மின்சாரக் கம்பத்தில், தடுப்புச் சுவரில் அணைக்கட்டில், மலைக் குன்றில், கரையில் அல்லது மரத்தில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல் கூடாது.

13. இந்தச் சபை தீர்மானம் ஒன்றின் மூலம் நிறைவேற்றிக் குறித்துக் காட்டப்பட்டதும், வர்த்தமானியில் உரிய முறையில் பிரசுரிக்கப்பட்டதுமான பிரதேசமொன்றில் ஏதும் விளம்பர அறிவித்தலை, அது உடபலாத்த பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அமைந்தாலொழிய அல்லது அமைக்கப்பட்டிருந்தாலொழிய, காட்சிப்படுத்துதல் கூடாது.

14. உடபலாத்த பிரதேச சபையின் பிரதேசத்துக்குள் எந்த வீதியிலும் அல்லது பாதையிலும் எவரேனும் ஒருவர்,

I. ஒரு பலகையில், உதவுகையில் அல்லது சட்டகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஏதும் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காகக் கொண்டு செல்லுதல் அல்லது கொண்டு செல்ல வைத்தல் கூடாது;

II. ஏதும் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்தும் அல்லது அறிமுகப்படுத்தும் கருமத்துக்கென வானொலியை, கிராம்போனை, இசைக்கருவியை, மணியை அல்லது வேறேதும் உபகரணத்தை பிரதேச சபையின் அனுமதியின்றிப் பயன்படுத்துதல் சட்டபூர்வமாக அமையாது.

15. I. ஏதும் விளம்பர அறிவித்தலொன்றில் அழகில்லாத அல்லது வெறுக்கத்தக்க, பொதுமக்களது கலாசாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் ஏதேனுமொன்றைக் காட்டும் சந்தர்ப்பத்தில், உடபலாத்த பிரதேச சபை எழுத்துமூல அறிவித்தலொன்றின் மூலம் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள் குறித்த விளம்பரத்தைக் காட்சிப்படுத்துவதை நிறுத்துமாறு அதனைக் காட்சிப்படுத்துபவரை விதிக்க முடியும் ;

II. இந்தத் துணைவிதியின் I ஆவது பந்தியின் கீழ் அறிவித்தலொன்று கையளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்துக்குள் உரிய அறிவுறுத்தலைச் செயற்படுத்துதல் வேண்டும்.

16. விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஏதும் பலகையொன்றின் உரிமையாளர் அல்லது குத்தகையாளர்-

I. குறித்த பலகைகளில் உரிய திருத்த வேலைகளை மேற்கொண்டு ஆட்களது பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அதனைப் பராமரித்து வருதல் வேண்டும் ;

II. குறித்த பலகையின் முன்பக்கத்தில் நன்கு தென்படும் வண்ணம் தெளிவாகவும், வாசிக்கக்கூடிய எழுத்துக்களிலும் அவர்களது பெயர், முகவரியைக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

17. ஏதேனுமொரு விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்குரிய அனுமதிக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதனைக் காட்டுவதற்காக உடபலாத்த பிரதேச சபை உட்படுத்தியுள்ள சின்னத்தை, குறியீட்டை, எழுத்தை, சொல்லை அல்லது இலக்கத்தை எவரும் சிதைத்து விடுதல் கூடாது.

18. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

19. 18 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப் பணப் பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

20. அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறாது உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும். துணைவிதி 04 இல் காட்டப்பட்டுள்ள அனைத்து விளம்பர அறிவித்தல்களையும் எவ்வித முன்னறித்தலுமின்றிச் சபை அகற்றி விடுவது சட்டபூர்வமானதாக அமையும்.

21. விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் எஞ்சியிருந்தாலும் ஏதேனும் ஒரு வகையில் பொருத்தப்பட்ட சுவரில் அல்லது மதிலில் வரையப்பட்ட பதாதை, கட்அவுட், விளம்பரப்பலகை எவ்வகையிலேனும் காற்றில் சரிந்து கழன்று விழுந்தோ அல்லது நிறம் மாறி, உடைந்து, சிதைந்து நகரத்தின் வனப்பைக் குறைத்துவிடக் காரணமாக இருப்பின், அதுபற்றிய எழுத்துமூல அறிவித்தல் உரியவரிடம் கையளிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இருந்தவாறு திருத்தியமைத்துவிட அறிவித்தல் விடுக்கப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல், சபை அதனை அகற்றுதல் வேண்டும். சபை அவ்வாறு தெரிவித்த 14 நாட்களின் பின்னர் சபையின் பணியாட்களை ஈடுபடுத்தி விளம்பரத்தை அகற்ற நேரிட்டால், அந்த விளம்பரம் பற்றி எவ்விதத்திலும் சபை வகை சொல்லாது.

22. சொற்கள் பற்றிய விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள -

"தலைவர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும் ;

"சபை" என்பது, உடபலாத்த பிரதேச சபையையும் ;

"விளம்பர அறிவித்தல்" என்பது, ஏதேனுமொரு கட்டடத்தில், காணியில், நிர்மாணத்தில் அல்லது அவ்வாறானவற்றுக்கு மேல் விளம்பரத்துக்கென முழுமையான அல்லது அரைவாசியாக விளம்பரத்தின் தன்மையைக் காட்டும், விளம்பரமொன்றைக் காட்சிப்படுத்தும் எந்தவொரு எழுத்தையும், சொல்லையும், சில சொற்களையும், குறியீட்டையும், விளம்பரத் தாளையும், பலகையையும் ஏனைய நுட்ப முறைகளையும் குறிக்கும்.

**அட்டவணை - 01**

விளம்பர அறிவித்தல் பலகையைப் பொருத்துவதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-----.
2. நிரந்தர முகவரி :-----.
   விளம்பர நிறுவனம் :-----.
   தொலைபேசி இலக்கம் :-----.

3. விளம்பரம் காட்சிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வர்த்தகம், உற்வசம், கண்காட்சி, களியாட்டம், கூட்டம் அல்லது வர்த்தகப் பொருட்கள் பற்றிய விபரம் :
4. விளம்பரம் காட்சிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இடம்/இடங்கள் :-----.
5. உரிய மாதிரி இணைக்கப்பட்டுள்ளதா? :-----.
6. காட்சிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் வகை: (பதாதை/பலகை/கட்டஅவுட்/சுவர்/மதில் அல்லது நிலையான)
7. விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்த அனுமதி கிடைத்ததன் பின்னர், குறித்த விளம்பரத்தில் நிறம் மங்குதல், கழன்றுவிடுதல், தரையில் விழுந்துவிடுதல் போன்றன ஏற்பட்டால், அதனை மீளத் தயாரிப்பதற்கு இணங்குவதா என்பது :...............

உடபலாத்த பிரதேச சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைய அறிவித்தலைக் காட்சிப்படுத்த இணங்குவதுடன், இது பற்றிய துணைவிதிகள் அல்லது ஏதும் பிரிவுகள் என்பவற்றை மீறுவது தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் நன்கு அறிவேன்.

..........................................

திகதி :..................................... விண்ணப்பகாரரது கையொப்பம்.

பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன :

1. விளம்பர அறிவித்தல் நிரந்தரமானதெனின் அதனைப் பொருத்தவுள்ள காணியின் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட சம்மதக் கடிதம்.

2. குறித்த விளம்பரம் வீடு, கடை, ஹோட்டல், சுவர், மதில் அல்லது அதுபோன்ற ஒன்றில் வரையப்படுமெனின், குறித்த மதில், சுவர், கடை, ஹோட்டல் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட சம்மதக் கடிதம்.

3. விளம்பர அறிவித்தலை வரையும் அல்லது நிரந்தரமாக அமைக்கப்பயன்படுத்தும் தரையைப் பற்றிய விபரம்.

4. விளம்பர அறிவித்தலுக்கான மாதிரியைத் தெளிவாக முன்வைத்தல் வேண்டும். (அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பின்னர் மாதிரியில் மாற்றங்களை மேற்கொள்ள எவ்வகையிலும் இடமளிக்கப்படமாட்டாது).

**அட்டவணை - 02**

(ஒரு சதுர அடிக்கு)

| தொடர் இல. | அறிவித்தல் பலகையின் தன்மை | அளவு - சதுர அடி | 03 மாதங்களுக் குக் குறைய கட்டணம் ரூபா சதம் | 3 முதல் 06 மாதங்கள் வரை கட்டணம் ரூபா சதம் | ஒரு வருடம் கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| 1. | சுவரொன்றில் அல்லது மதிலொன்றில் காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன் றுக்கு | 02 முதல் 10 வரை | 25.00 | 25.00 | 30.00 |
| | | 10 இற்கு மேல் | 25.00 | 30.00 | 35.00 |
| 2. | துணி டிஜிட்டல் பதாதைகள் | 02 முதல் 10 வரை | 30.00 | 35.00 | 40.00 |
| | | 10 இற்கு மேல் | 35.00 | 40.00 | 45.00 |
| 3. | தகடு அல்லது பலகையொன்றில் காட்சிப் படுத்தப்படும் அறிவித்தலொன்றுக்கு | 02 முதல் 10 வரை | 35.00 | 40.00 | 100.00 |
| | | 10 இற்கு மேல் | 40.00 | 45.00 | 100.00 |
| 4. | மின்னொலி ஊட்டப்பட்ட விளம்பர காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன் றுக்கு | 02 முதல் 10 வரை | 45.00 | 45.00 | 50.00 |
| | | 10 இற்கு மேல் | 50.00 | 55.00 | 60.00 |
| 5. | இலத்திரனியல் உபகரணம் கொண்டு காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன் றுக்கு | 02 முதல் 10 வரை | 40.00 | 45.00 | 50.00 |
| | | 10 இற்கு மேல் | 50.00 | 55.00 | 60.00 |
| 6. | பிளாஸ்டிக் அல்லது கல்நார் கொண்டு காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன் றுக்கு | 02 முதல் 10 வரை | 50.00 | 55.00 | 60.00 |
| | | 10 இற்கு மேல் | 55.00 | 60.00 | 65.00 |
| 7. | மெழுகுச்சீலை அல்லது காட்போட் கொண்டு காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன்றுக்கு | 02 முதல் 10 வரை | 20.00 | 25.00 | 30.00 |
| | | 10 இற்கு மேல் | 30.00 | 35.00 | 40.00 |

7- 1293/5

---

**மத்திய மாகாண மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் xi (எ) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து

வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 02.

மாடுகள் அறுக்குமிடங்கள் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள மாடு அறுக்குமிடங்களை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், பரிசோதித்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. .இந்தத் துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள மாடு அறுக்குமிடங்களை முறைப்படுத்தும், மேற்பார்வை செய்யும், பரிசோதிக்கும் மற்றும் கட்டணம் அறவிடும் நோக்குடன் விதிக்கப்படுகின்றன.

3. அறுவை நடைபெறும் ஒவ்வொரு அறுக்குமிடமும், குறித்த கருமத்துக்கென உரிய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரது பொறுப்பின் கீழ் இருத்தல் வேண்டும். அவர் அறுக்குமிடத்தின் பொறுப்பாளர் என அழைக்கப்படுவார்.

4. அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலரால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் நேரங்களின்போது அல்லாது, அனுமதிப்பத்திரம் பெற்ற எந்தவொரு அறுவை செய்பவரும் விலங்குகளை அறுப்பதற்கு இடமளிக்காது இருத்தல் வேண்டும்.

5. அறுக்குமிடத்தின் பொறுப்பாளர் அதன் உள்ளே, அனுமதிப்பத்திரம் பெற்ற அறுவை செய்பவருக்கென ஒதுக்கித்தரும் இடத்தில் மட்டுமே விலங்குகளை அவர் அறுத்தல் வேண்டும்.

6. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எந்தவொரு விலங்கையும் பரிசீலனை செய்து, அதனை அறுக்க முடியுமென வழங்கிய எழுத்துமூல சான்றிதழ் இருந்தாலொழிய, எந்தவொரு விலங்கையும் அறுத்தல் கூடாது.

7. மேற்குறித்த 6 ஆவது துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ், அது வழங்கப்பட்ட தினத்திலிருந்து 7 நாட்கள் வரை மட்டமே செல்லுபடியாகும்.

8. அறுவைக்கு உட்படும் ஒவ்வொரு விலங்கினதும் முழு உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணத்தைத் தமது பொறுப்பில் வைத்துக்கொள்வதுடன், குறித்த விலங்கின் தன்மை, அதன் உரிமை பற்றிய தகவல்களையும், உடபலாத்த பிரதேச சபை அனுமதித்த படிவங்களில் உள்ள ஏனைய அனைத்து விபரங்களையும் கொண்ட பதிவேட்டையும் அறுவை செய்யுமிடத்தின் பொறுப்பாளர் பேணி வருதல் வேண்டும்.

9. மாடு அறுக்குமிடத்துக்கு விலங்குகளை உட்படுத்த முன்னர், பின்வரும் ஆவணங்களை அறுவை செய்யுமிடத்தின் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க இயலாத எந்தவொரு விலங்கையும் உட்படுத்த இடமளித்தல் கூடாது.

1. அடையாளச் சான்றிதழ்
2. தகவுச் சான்றிதழ்
3. அனுமதிப்பத்திரம்

10. அறுக்குமிடத்துக்குக் கொண்டுவரப்படும் அல்லது அங்கு தடுத்து வைக்கப்படும் எல்லா விலங்குகளையும் மக்கள் பார்வைக்குத் தென்படும் வண்ணமும், தப்பிச் செல்வதைத் தடுக்கும் வண்ணம் கயிற்றினால் கட்டப்பட்டும் வைத்திருத்தல் வேண்டும்.

11. தமது வர்த்தகம் தொடர்பாக அறுவை செய்வதில் ஈடுபடுத்த உத்தேசித்துள்ள அறுவை செய்வோராது பெயர்களை ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் உடபலாத்த பிரதேச சபை அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும். எந்தவொரு பெயரையும்

பதிவு செய்யாது விடவும், அல்லது பதிவு செய்யப்பட்ட எந்தவொரு பெயரை நீக்கிவிடவும் தலைவருக்கு அல்லது அவரது அதிகாரம்பெற்ற அலுவலருக்கு இயலும். அவ்வாறு பதிவு செய்யப்படாத அல்லது பெயர் நீக்கப்பட்ட எந்தவொரு அறுவையாளரையும் சேவையில் ஈடுபடுத்துதல் கூடாது.

12. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொரு அறுவையாளரும் அவரது அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்திய பிரதியையும், அவரால் அறுக்குமிடத்தில் பணியாற்றும் அனைவரதும் பதிவுபெற்ற சான்றிதழின் உறுதிப்படுத்திய பிரதியையும் பெற்றுக்கொண்டு உடனடியாக அவற்றை அறுக்குமிடப் பொறுப்பாளரிடம் முன்வைத்தல் வேண்டும்.

13. அறுக்கப்பட்ட விலங்குகளின் தோல், குடல் மற்றும் நீக்கப்படும் பகுதிகளை அறுவையாளர் அல்லது அவரது பணியாளர் அகற்றிச் செல்ல முன்னர், அவற்றைக் கழுவுவதற்கென ஒதுக்கப்பட்ள்ள இடத்தில் சேர்த்துவைத்தல் வேண்டும்.

14. அறுவையாளர் அல்லது அவரது பதிவுபெற்ற வேலையாட்கள் அறுவையிடத்தைப் பயன்படுத்தும் வேளையில், அதற்கு ஏற்படும் ஏதும் சேதங்கள் தொடர்பாக அனுமதிபத்திரம் பெற்ற அறுவையாளர் வகை சொல்லுதல் வேண்டும். அவ்வாறான தொகையைச் செலுத்த மறுக்கும் பட்சத்தில், தலைவரால் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யவோ அல்லது மாற்று நடவடிக்கையாக ஏற்பட்ட சேதத்துக்கான தொகையை அனுமதிப்பத்திரம் பெற்ற அறுவையாளரிடமிருந்தோ அல்லது பிணையாளியிடமிருந்தோ அல்லது இவ்விரண்டு வழிகளிலோ அதனை ஈடுசெய்துகொள்ள முடியும்.

15. சரும நோய்கள். தொழு நோய் அல்லது தொற்றுநோய்களால் அல்லது ஒட்டுநோயினால் பீடிக்கப்பட்டுள்ள எவரும் அறுவை செய்யுமிடத்துக்குள் உட்புக இடமளித்தல் கூடாது.

16. அறுவையிடத்திலிருந்து இறைச்சி விற்பனை செய்யும் இடம்வரை இறைச்சியைக் கொண்டு செல்வதற்குரிய எல்லா சந்தர்ப்பத்திலும் உடபலாத்த பிரதேச சபைக்குரிய வாகனம், வழங்கப்படுவதுடன், அவ்வாறில்லாத நிலைகளில் தலைவர் அனுமதி வழங்கும் வாகனங்களில் இறைச்சியைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.

17. விலங்குகள் தொடர்பில் ஒரு விலங்குக்கெனப் பின்வரும் கருமங்களுக்காக அறவிடப்படவேண்டிய கட்டணங்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானிக்கும்.

1. அறுவை செய்யுமிடத்தைப் பயன்படுத்துவதற்காக

(அ) மாடுகள் (எருமைகள் அல்லாத) ;

(ஆ) பன்றிகள் அல்லது ஆடுகள்.

2. மாடுகளுக்குத் தீவனம் வழங்குதல்

(இருபத்திநான்கு மணி நேரத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு)

(அ) மாடுகள் (எருமைகள் அல்லாத) ;

(ஆ) பன்றிகள் அல்லது ஆடுகள்.

3. மண்டபத்தைப் பயன்படுத்துவதற்கென

(அ) மாடுகள் ;

(ஆ) பன்றிகள் அல்லது ஆடுகள்

18. செலுத்தப்படவேண்டிய கட்டணங்களைத் தட்டிக் கழிக்கும் காரணத்தை முன்னிட்டு அறுவை செய்யுமிடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒரு விலங்கை இரண்டு நாட்களுக்கு முன்னர் பிரச்சாரம் செய்த பின்னர், தலைவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய முடியும். அவ்வாறு விற்றுப்பெற்ற தொகையில் அதற்கென அறவிடப்படவேண்டிய ஏதும் தொகையையும், அதற்காக

ஏற்பட்ட செலவுகளையும் தமது பொறுப்பில் வைத்துக்கொண்டு எஞ்சிய தொகை இருப்பின், அத்தொகையை விலங்கை அறுப்பதற்கென அறுக்குமிடத்துக்குக் கொண்டுவந்தவரிடம், அவர் கேட்டுக்கொண்டதற்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் செலுத்தப்படுதல் வேண்டும். ஏலவிற்பனை செய்யப்பட்ட ஒரு வருடத்துக்குள் அதற்கு உரியவர் கேட்டுக்கொள்ளப்படாதவிடத்து, அத்தொகை சபை நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

19. நோயுற்ற அல்லது வேறேதும் காரணங்களால் மனித நுகர்வுக்கென அறுக்க முடியாதவையெனக் காணப்படும் விலங்குகளை, அதுவரை அறுப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், அல்லாது இருந்தாலும், அவற்றை அறுவை செய்வதை அறுவை செய்யுமிடப் பொறுப்பாளர் அல்லது பிரதேச வைத்திய அதிகாரி தடுப்பது சட்டபூர்வமானதாக அமையும் மேலும், அவ்வாறான விலங்குகளை எவரும் அறுவை செய்யக்கூடாது.

20. அறுவை செய்வதற்கென அனுமதிப்பத்திரம் வழங்குவது மறுக்கப்பட்ட அல்லது அறுவை செய்வது, தடுக்கப்பட்ட விலங்குகளை அறுவையிடத்துக்குக் கொண்டுவந்தவர், தடை செய்யப்பட்ட பன்னிரண்டு மணி நேரத்துக்குள் விலங்குகளை அவ்விடத்திலிருந்து அகற்றிக்கொள்ளாத பட்சத்தில் 18 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும்.

21. சபை அங்கீகரித்த அனுமதிப்பத்திரம் ஒன்றின் மாதிரிக்கமைய அனுமதிப்பத்திரத்தை வழங்க அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதற்கென நியமிக்கப்பட்ட அலுவலரால் கையொப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரம் இருந்தாலொழிய, பொது அறுவையிடத்திலிருந்து அறுக்கப்பட்ட விலங்கின் இறைச்சி, தோல், குடல் அல்லது எஞ்சிய இறைச்சி என்பவற்றை எவரும் எடுத்துச் செல்லக்கூடாது. அவ்வாறானவற்றைக் கொண்டு செல்லும்போது உடபலாத்த பிரதேச சபையின் அலுவலர் ஒருவர் வேண்டிக்கொள்ளும் வேளையில் அனுமதிப்பத்திரத்தைப் பரிசீலனைக்காக முன்வைத்தல் வேண்டும். அவ்வாறு முன்வைக்க எவரும் மறுத்தால், குறித்த இறைச்சி, குடல், தோல் என்பவற்றைத் தடை செய்து உடபலாத்த பிரதேச சபையின் தலைவர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர் விதிக்கும் இடத்துக்குக் கொண்டு சென்று நட்டஈடு இன்றி அகற்றுவதற்கு உடபலாத்த பிரதேச சபை அலுவலகத்துக்கோ அல்லது பொலிஸ் நிலையத்துக்கோ கொண்டு செல்ல உட்படுதல் வேண்டும்.

22. நாய்கள் எதனையும் அறுவை செய்யுமிடத்துக்குள் கொண்டுவர இடமளித்தல் கூடாது. எந்த நாயினதும் சொந்தக்காரர் அல்லது பொறுப்பாளரும் அறுவை செய்யுமிடத்தினுள் நாயை உட்செலுத்த இடமளித்தல் கூடாது. அறுவை செய்யுமிடத்துக்கு வரும் நாய்கள் அனைத்தும் கட்டாக்காலி நாய்கள் எனக் கருதப்பட்டுச் செயற்படுதல் வேண்டும்.

23. அனுமதிப்பத்திரம் பெற்ற எந்தவொரு அறுவையாளரும் அல்லது பதிவு பெற்ற அவரது உதவியாளரும் அறுவை செய்யுமிடத்தினுள் உட்புக அனுமதி பெற்ற எவரும் சத்தமிடுதல், கலவரம் செய்தல் அல்லது சண்டையிடுதல் அவமரியாதை செய்தல், நாகரிகமற்ற வார்த்தைகளைப் பிரயோகித்தல் என்பவற்றைச் செய்தல் கூடாது.

24. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இருந்தாலொழிய, அனுமதிபெற்ற அறுவையாளர் தவிர்ந்த எவரும் உடபலாத்த பிரதேச சபையின் அறுவை மண்டப வளவில் எந்தவித விலங்கையும் அறுவை செய்வது சட்டபூர்வமானதாக அமையாது. எனினும் விசேட அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலோ அல்லது அதில் உள்ள நிபந்தனைகளின் கீழோ அல்லாது உரிய அறுவையைச் செய்தல் கூடாது. அவ்வாறான விசேட அனுமதியைப் பெறுவதற்கென உள்ள படிவத்தில் அறுவை செய்யப்படவுள்ள விலங்கு தொடர்பான (473 ஆவது அத்தியாயம்) மாடுகளுக்குக் குறி சுடுதல், விற்றல் மற்றும் கைமாற்றம் செய்தல் பற்றிய கட்டளைச் சட்டத்தின் அட்டவணை "அ" படிவத்துக்கமைய விபரங்களைத் தருதல் வேண்டும். உரிய விலங்கு விண்ணப்பதாரிக்குச் சொந்தமானதெனப் பிரதேசத்தின் பொலிஸ் அலுவலர் அல்லது உடபலாத்த பிரதேச சபை அலுவலர் அல்லது கிராம அலுவலரது அறிக்கையும் இணைக்கப்படுதல் வேண்டும். இந்த விசேட அனுமதிப்பத்திரத்துக்கென இருநூற்று ஐம்பது ரூபா (250.00 ரூபா) இற்குக் குறையாத அல்லது சபைத் தீர்மானிக்கும் கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும்.

25. தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் விதிக்கும் நேரங்களில், ஒவ்வொரு அறுவை மண்டபத்தையும் குறைந்தது ஒரு நாளில் இரண்டு தடவைகளேனும் நன்கு கூட்டிக் கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

26. ஒவ்வொரு அறுவை மண்டபத்தின் உட்புறமும் வெளிப்புறமும் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் வெள்ளையடிக்கப்படுதல் வேண்டும்.

*27. ஒவ்வொரு அறுவை மண்டபத்தினதும் உட்தரை கருங்கல் அல்லது செங்கல் அல்லது கொங்கிறீட் இடப்பட்டதாகவும், அவற்றில் இடைவெளி இல்லாத வகையில் சிமெந்துச் சுதையை வருடத்தில் ஒரு தடவையேனும் புதுப்பித்து வருதல் வேண்டும்.*

*28. அறுப்பதற்கென அனுமதித்த ஏதுமொரு விலங்கு அறுக்கப்பட்டதன் பின்னர் அதன் உடல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதென அல்லது அது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றதெனக் காணப்பட்டால், தலைவரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால், மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றதென அதனை அகற்ற ஏற்பாடு செய்யப்படுவது தொடர்பில் மிருக வைத்தியர் அல்லது சுகாதார அதிகாரி மேற்கொள்ளும் முடிவே இறுதியானதாக அமையும். இவ்வாறு செய்யப்படும்போது எதுவித நட்டஈடும் பெறும் உரிமை இல்லை.*

*29. விலங்குகளை அறுவை செய்யும்போது அல்லது தோல் உரிக்கும்போது, இறைச்சியை வெட்டும்போது அறுவையாளர் தமது வேலையாட்கள் உடபலாத்த பிரதேச சபையின் அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய எவரும் அறுவை மண்டபத்தினுள் உட்செல்ல முடியாது.*

*30. அறுவையாளர் அல்லது அவரது ஊழியர்கள் அறுவை மண்டபத்தினுள் விட்டுச் செல்லும் எஞ்சிய இறைச்சி அல்லது ஏனைய கழிவுகள், கழிவு இறைச்சி அகற்றப்படும் முறையில் நீக்கப்படுதல் வேண்டும்.*

*31. எந்தவொரு விலங்கின் இறைச்சியையும், அது சூரிய ஒளி, தூசு மழை என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டு மக்களுக்குத் தென்படாத வகையில் மறைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தில் கொண்டு சென்றாலொழிய, உடபலாத்த பிரதேச சபையின் அறுவை மண்டபத்திலிருந்து அல்லது ஏனைய அறுவையிடங்களிலிருந்து சந்தைக்கு அல்லது உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் எந்தவொரு இடத்துக்கும் கொண்டு செல்வது அல்லது கொண்டு செல்ல இடமளிப்பது கூடாது.*

*32. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி செயற்படுவது சட்டபூர்வமானதாக அமையும்.*

*33. 32 ஆவது துணைவிதியின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப்பணம் பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.*

*34. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :*

*"சபை" என்பது, உடபலாத்த பிரதேச சபையையும் ;*

*"தலைவர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும் ;*

*"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,*

*"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, தலைவர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரையும் ;*

*"அறுவை செய்யுமிடப் பொறுப்பாளர்" என்பது, அறுக்குமிடத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்ற நியமிக்கப்பட்ட ஒருவரையும் ;*

*"விலங்குகள்" என்பது, ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் பதப் பிரயோகங்களையும் குறிக்கும்.*

*35. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.*

*7- 1293/6*

**மத்திய மாகாண, மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் ix (ஏ) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2015, பெப்புருவரி 02.*

இறைச்சி விற்பனை நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்

*1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இறைச்சி வர்த்தகம் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.*

*2. உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இறைச்சி வர்த்தகத்தை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடுதல் என்பவற்றுக்காக இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.*

*3. எவரேனும் ஒருவர் உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்தரத்தின் கீழ், அல்லாது, பிரதேச சபையின் எல்லைக்குள் எந்த விற்பனை நிலையத்திலும், இடத்திலும் இறைச்சியை விற்பனை செய்வதற்காகக் காட்சிப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் கூடாது.*

*4. மூன்றாவது துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம். அது தலைவரால் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்த வருடத்துக்காக வழங்கப்பட்டதோ, அந்த வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதியடன் முடிவடைதல் வேண்டும்.*

*5. அனுமதிப்பத்திரதாரி குறித்த வர்த்தக நிலையத்தில் தமது பெயரையும், முகவரியையும் பதிவிலக்கத்தையும், அனுமதிப்பத்திரம் பெற்ற இறைச்சி விற்பனை நிலையம் எனத் தமிழிலும், சிங்களத்திலும் தெளிவாகத் தெரியும் வண்ணம் பலகையொன்றில் எழுதித் தொங்கவிடுதல் வேண்டும்.*

*6. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வர்த்தக நிலையத்தில் அல்லது இடத்தில் பணி புரிவோரது பெயர், முகவரியைக் கொண்ட பட்டியலைப் பரிசீலனைக்காகத் தேவைப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன்வைக்கக்கூடிய விதத்தில் நிலையத்தில் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் அந்தப் பெயர்ப்பட்டியலைப் பிரதேச சபையில் பதிவு செய்தலும் வேண்டும். வருடாந்தம் அனுமதிப்பத்திரத்தைப் பெற முன்னர் பணிபுரிவோரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துதல் வேண்டும். அந்த அறிக்கையைத் தலைவரிடமும் முன்வைத்தல் வேண்டும்.*

*7. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் நிலையத்தின் தரையையும், சுவரையும் பீங்கான் கற்கள் பதித்த அல்லது சிமெந்து பூசப்பட்ட பகுதியையும், இறைச்சியை வெட்டுவதற்கெனப் பயன்படுத்தும் மேசையின் மேற்பரப்பையும், அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் ஒரு நேரத்தில் நாளாந்தம் சுரண்டிச் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும். இறைச்சியைக் கொழுவப் பயன்படுத்தும் கொழுக்கி அல்லது ஏனைய உலோக உபகரணங்களைக் கறை படியாத வண்ணம் வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

*8. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் நிலையத்தின் ஒவ்வொரு பகுதியையும், அதனைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வடிகான்களையும் இறைச்சியை களஞ்சியப்படுத்துதல், தயாரித்தல், விற்றல் என்பவற்றுடன் தொடர்பாகப் பயன்படுத்தும் அனைத்து தளபாடங்களையும், பாத்திரங்களையும், உபகரணங்களையும் திருத்தியமைத்து நல்ல நிலைமையில் பேணி வருவதுடன், ஏதும் வடிகான், மலசலகூடம் சுண்ணாம்பு நீர்க்குழி அல்லது அது போன்ற பீடைதரும் இடங்களிலிருந்து துர்நாற்றம் வராத வகையிலும் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.*

*9. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும், தமது வர்த்தக நிலையத்தின் கழிவுகள், குப்பைகள், அழுக்குகள் என்பவற்றைத் தற்காலிகமாக இட்டுவைக்கவெனப் பிரதேச சபை அங்கீகரித்த முறையிலும், அருகில் நடமாடும் மக்களுக்கு பீடைகள் ஏற்படாத வண்ணமும் முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அவற்றை அகற்றச் செயல்படுதல் வேண்டும்.*

*10. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வர்த்தக நிலையத்தை எலிகள் மற்றும் கிருமிகள் அற்ற இடமாகப் பராமரித்து வருதல் வேண்டும்.*

*11. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தலைவர் வழங்கிய அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடாத எந்தவொரு விலங்கையோ அல்லது பறவையையோ அனுமதிபெற்ற இடத்தில் வைத்திருத்தல் கூடாது.*

*12. சரும நோய்கள், தொழு நோய் அல்லது ஏதும் ஒட்டுநோயினால் பீடிக்கப்பட்டுள்ள எவரையும் வர்த்தக நிலையத்தின் பணியாட்களாக வேலையில் ஈடுபடுத்தக்கூடாது.*

*13. இறைச்சியைக் களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனை செய்வதற்கோ பயன்படுத்தப்படும் உபகரணங்களைத் தவிர, ஏனைய தளபாடங்களையோ அல்லது பொருட்களையோ அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் எவரும் வைத்திருத்தல் கூடாது.*

*14. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும், அனுமதிபெற்ற இடத்தில் போதிய அளவான சுத்தமான நீரை வைத்திருத்தல் வேண்டும்.*

*15. ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 21 ஆவது பிரிவின் அல்லது 201 ஆவது அதிகாரத்தின் கீழ் உரிய வகையில் வெளிப்படுத்தப்பட்ட குறித்த கட்டளைச் சட்டத்தின் 11 ஆவது பிரிவுக்கமைய குறித்த கருமத்துக்கென அதிகாரமளிக்கப்பட்டவரால் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள பொது அறுவையிடத்தில் அறுவை நடத்தப்பட்ட விலங்கின் இறைச்சி தவிர்ந்த எந்தவொரு இறைச்சி வகையையும் குறித்த கட்டளைச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் கீழ் அல்லாது, அனுமதிப்பத்திரதாரி விற்பனைக்கெனக் காட்சிப்படுத்துதல் கூடாது.*

*16. இறைச்சியை நிறுத்து விற்பதற்கான தராசு இலத்திரனியல் இலக்கங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அதன் ஒரு முகம் மக்களுக்குத் தென்படும் விதத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*17. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் இறைச்சி விற்பனை தடை செய்யப்பட்ட நாட்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு நாளிலும் காலை 7 மணி முதல் பிற்பகல் 7 மணிவரை திறந்திருத்தல் வேண்டும்.*

*18. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும் , குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உபபிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.*

*19. 18 ஆவது துணைவிதியின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப் பணம் பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.*

*20. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :*

*"பிரதேச சபை" என்பது, உடபலாத்த பிரதேச சபையையும் ;*

*"தலைவர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும் ;*

*"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,*

''விலங்குகளின் இறைச்சி'' என்பது, மாடு, ஆடு, பன்றி, கோழி என ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விலகுகளின் இறைச்சியையும் குறிக்கும் ;

21. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 1293/7

---

**மத்திய மாகாண, மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் ix (ஏ) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 02.

மீன் விற்பனை நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் உணவுக்காக எடுக்கப்படும் மீன்கள் விற்பது தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. நிர்வாக எல்லைக்குள் வாழும் மக்களுக்கு உணவுக்காக மீன்களை விற்பனை செய்வது, அந்த மீன்களைச் சுகாதாரமானவையாகவும், நிர்ணயங்களுக்கு அமையவும் விற்பனை செய்வது, கட்டுப்படுத்துவது, முறைப்படுத்துவது என்பதற்காக இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இந்தத் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கென விற்குமிடங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் என்பவற்றில் பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கெனப் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையவல்லாது, அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள உரிமை இல்லாது இருத்தல் வேண்டும்.

(அ) விற்பனைக்காக மீன்கள் வைக்கப்பட்டுள்ள பிரிவு பீங்கான் செங்கற்களால் அல்லது சிமெந்துப் பூச்சு மெழுகினால் அல்லது கறைபடியாத உலோகத்தினால் அமைக்கப்பட்ட பிரதேச சபை அங்கீகரித்த அதன் அறிவுரைக்கு அமைய தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) மீன் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடத்தின் தரையும், களஞ்சிய நிலையத்தின் தரையும் சிமெந்துப் பூச்சினால் அல்லது பீங்கான் செங்கற்களால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) கழிவு நீர் வழிந்தோடுவதற்கென உள்ள வடிகான் சபையின் சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனைக்கு அமைய முறைப்படி தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*4. அதிகாரமளிக்கப்பட்டவரால் குறித்த விற்பனை நிலையத்தில் அவரது பெயர், முகவரி, பதிவிலக்கம் மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்ற மீன்விற்பனை நிலையம்ஆகியவற்றை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பெயர்ப்பலகையில் எழுதி அதை தெளிவாகத் தென்படும் வண்ணம் தொங்கவிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*5. மீன் விற்பனை நிலைய ஒவ்வொரு அனுமதிதாரியும் அங்கு பணிபுரிவோரது பெயர் முகவரி கொண்ட பட்டியலை தாமதமின்றி தலைவரிடம் முன்வைத்தல் வேண்டும். அதிலுள்ள அனைவரும் அங்கீகரித்த வைத்திய மருத்துவப் பரிசோதனைக்கு ஆண்டுதோறும் உட்படுத்தப்பட்டு, குறித்த மருத்துவ அறிக்கைகள் சபையிடம் முன்வைக்கப்படல் வேண்டும்.*

*6. ஐந்தாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை நிலையப் பணியாளர்கள் மார்புக்கு மேலுள்ள பகுதியைக் காட்டும் 2 புகைப்படங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*7. மீன் வின்பனை நிலைய ஒவ்வொரு அனுமதிதாரியும் தமது நிலையத்தின் ஒவ்வொரு பகுதியையும் அதனைச் சூழவுள்ள வடிகான்களையும் மீனைக் களஞ்சியப்படுத்தவும் விற்கவும் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு பொருளையும் உபகரணத்தையும் நன்கு திருத்தியமைத்து உரிய முறையில் பராமரித்து வருவதுடன் அவ்விடத்திலிருந்து துர்நாற்றம் வீசாத வகையில் வழி செய்தலும் வேண்டும்.*

*8. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் வர்த்தகம் செய்யும் சந்தர்ப்பத்தில் கழிவுப் பொருட்களை இட்டு வைப்பதற்காக பயன்படுத்தப்படும் மூடி வைக்கக்கூடிய கழிவுப் பொருள் கொள்கலனை வைத்திருத்தல் வேண்டும். அது பிரதேச சபையின் நிருணயங்களுக்கு அமைவாக நாளாந்தம் சுகாதாரமான முறையில் அகற்றித் துப்புரவு செய்யப்படுதல் வேண்டும்.*

*9. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தன் வர்த்தக நிலையத்தை எலிகள், நாய்கள், பறவைகள், கால்நடைகள், ஈக்கள், நுளம்புகள் மற்றும் நோய்க்காவிக் கிருமிகள் இல்லாத இடமாக வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டு.*

*10. ஏதும் சரும நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அந்நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளியை பராமரிக்கும் ஒருவர் மீன் விற்பனை நிலையத்திற்கு உட்பிரவேசித்தல், மீனைக் களஞ்சியப்படுத்தல், தயாரித்தல் விற்பனை செய்தல் என்பவற்றில் கலந்து கொள்ளுதல் அல்லது விற்பனை நிலையத்திற்கு மீன்களை கொண்டு வருதல் போன்ற எந்த கருமத்திலும் ஈடுபடுதல் கூடாது.*

*11. மீன் விற்பனைக்காக பயன்படுத்தப்படும் பொருட்களும் உபகரணங்களும் தவிர வேறு எந்த பொருட்களையும் உபகரணங்களையும் குறித்த விற்பனை நிலையத்தில் வைத்திருத்தல் கூடாது.*

*12. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தனது விற்பனை நிலையத்தில் போதுமான அளவில் சுகாதாரமான நீர் வசதியை வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

*13. தலைவர் குறித்துரைக்கும் நாட்களில் மீன் விற்பனை நிலையம் மூடப்பட்டிருத்தல் வேண்டும். ஏனைய நாட்களில் தினந்தோறும் முற்பகல் 7.00 மணி முதல் பிற்பகல் 7.00 மணி வரை திறந்திருத்தல் வேண்டும்.*

*14. தலைவரால் கையெழுத்திடப்பட்ட அனுமதிப்பத்திரம் அல்லாது, மீன் விற்பனை நிலையத்தின் அனுமதிப்பத்திரதாரி விற்பனைக்கென அவ்விடத்திலிருந்து மீன் கொண்டு செல்ல இடமளித்தல் கூடாது.*

*15. தலைவர் அல்லது குறித்த கருமத்தைச் செய்வதற்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நியாயமான எந்தவொரு நேரத்திலும் தனது நிர்வாக எல்லைக்குள் மீன் விற்பனை நிலையத்திற்குள் உட்சென்று பரிசோதனையை செய்வது சட்டபூர்வமானது என்பதுடன் அனுமதிப்பத்திரதாரி இதற்காக உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.*

*16. நாளாந்த விற்பனை நடவடிக்கைகளின் பின்னர் விற்பனை செய்யாது எஞ்சியுள்ள மீன்களை அதிகுளிரூட்டியில் களஞ்சியம் செய்தல் வேண்டும். அடுத்த நாள் விற்பனை நிலையத்தை திறக்கும் சந்தர்ப்பம் வரை அதிகுளிரூட்டி சரியான முறையில் தொடராகச் செயற்பட வகை செய்தல் வேண்டும்.*

*17. தலைவராலும் சுகாதார அலுவலர்களாலும் குறித்துரைக்கப்படும் முகமூடி, கையுறை, தொப்பி என்பவற்றை அணிதல் வேண்டும். அவை அனைத்தும் சுத்தமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.*

*18. மூன்றாவது துணைவிதியின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் தலைவரால் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அது எந்த ஆண்டுக்கு வழங்கப்பட்டதோ அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.*

19. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

20. 19 ஆவது துணைவிதியின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப்பணம் பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

21. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :

"சபை" என்பது, உடபலாத்த பிரதேச சபையையும் ;

"தலைவர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும் ;

"சுகாதார அலுவலர்" என்பது, சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தின் சுகாதார சேவைப் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதியையும் ;

"மீன் விற்பனை நிலையம்" என்பது, மீன் விற்பனைக்கெனச் சபை ஒதுக்கியுள்ள இடத்தையும்,

"அனுமதிப்பத்திரதாரி என்பது, மீன் விற்பனைக்கெனச் சபையிலிருந்து அனுமதியைப் பெற்றுள்ள ஒருவரையும் குறிப்பிடும்.

22. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 1293/8

---

**மத்திய மாகாண, மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (xiv) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 02.

உற்சவ உபகரணங்களையும் பொருட்களையும் வழங்குவது பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் உணவுக்குள் உற்சவ உபகரணங்களையும் பொருட்களையும் வழங்கும் தொழில்கள், அவை மூலம் வழங்கப்படும் சேவைகள் என்பவற்றை முறைப்படுத்துதல், கட்டணம் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் அல்லாது, பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் எவரும் உற்சவ உபகரணங்களையும் பொருட்களையும் வழங்கும் சேவைகளை வழங்குதல் அல்லது நடத்திச் செல்லுதல் கூடாது.

3. இரண்டாவது துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்தரமும், அது தலைவரால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, எந்த வருடத்துக்காக வழங்கப்பட்டதோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

4. ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணம் ஒன்றுக்கு உட்படுதல் வேண்டும்.

5. இரண்டாவது துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒரு அனுமதிப்பத்திரம் எவருக்காக வழங்கப்பட்டுள்ளதோ அவர் அதனை ஏனையோருக்குக் கைமாற்றம் செய்தல் கூடாது.

6. பின்வரும் நிபந்தனைகளுக்கமைச் செயற்பட்டுள்ளார் எனத் தலைவர் திருப்தியடைந்தாலன்றி, இரண்டாவது துணைவிதியின் கீழ் எவருக்கும் அனுமதிப்பத்திரத்தைப் பெறும் உரிமை இருத்தல் கூடாது.

(அ) உற்சவ உபகரணங்களையும் பொருட்களையும் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் இடம் நிரந்தரக் கட்டடமாகவும், அதன் தரை சிமெந்து இடப்பட்டும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களால் கூரை வேயப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) சுவர்களது உட்புறம் பெயின்ட் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) உற்சவங்களுக்கென வழங்கப்படும் பொருட்களுள் உணவு, பான வகைகளுக்கெனப் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களையும் பொருட்களையும் தரையில் வைத்தல் கூடாது என்பதுடன், அவற்றுக்கெனத் தயாரிக்கப்பட்ட ராக்கைகளில் அவற்றை வைத்தல் வேண்டும் ;

(உ) கிருமிகள், வளர்ப்பு மிருகங்கள் என்பவை இல்லாத இடமாக இது இருத்தல் வேண்டும் ;

(ஊ) உணவு, பானங்கள் என்பவற்றுக்காகப் பயன்படும் உபகரணங்கள், பொருட்கள், பாத்திரங்கள் என்பவை பயன்படுத்தப்பட முன்னரும், பயன்படுத்திய பின்னரும் சவர்க்காரமும் நீரும் இட்டுக் கழுவப்படுதல் வேண்டும் ;

(எ) உணவு, பானங்களுக்கு எனப் பயன்படாத ஏனைய மேசை, கதிரை, கூடாரம், மடுவம், உற்சவக் குடை, மனமேடை, குளத்துவிளக்கு போன்ற ஏனைய பொருட்கள் ஆபத்தில்லாத தன்மையுடன் நன்கு பேணப்பட்டு வருதல் வேண்டும்.

(ஏ) உற்சவங்களுக்கென வழங்கப்படும் மேசை விரிப்புக்கள், திரைச்சீலை, கைதுடைப்பம் போன்ற ஒரு தடவை பயன்படுத்திய பின்னர் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

7. உற்சவப் பொருட்களை வாடகைக்கு விடும் வர்த்தகம் ஒன்றை நடத்திச் செல்லும் ஒவ்வொருவரும், வர்த்தக நிலையத்தின் பெயர்ப்பலகையில், இரண்டாவது துணைவிதியின் கீழ் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. உற்சவப் பொருட்களுக்கெனவும் உபகரணங்களுக்கெனவும் அறவிடப்படும் கட்டண விபரங்கள் தெளிவாகக் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திரத்துடன் கட்டணமொன்று அறவிடப்பட முடியும். மேலும், அதனைச் சபை தீர்மானம் ஒன்றின் மூலம் அடிக்கடி மாற்றியமைக்க முடியும்.

10. தலைவரால் அல்லது அவரால் பொதுவாகவோ அல்லது விசேடமாகவோ எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட சபையின் எவரேனும் அலுவலர் பொதுவான நேரத்துக்குள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட நிலையம் ஒன்றினுள் நுழைந்து

பயன்படுத்தப்படுபவை எனக் கருதப்படும் பொருட்களையும், பண்டங்களையும், பரிசோதித்துப் பார்ப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

11. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும் , குறித்த மீறல்கள் தொடந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும், தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

12. 11 ஆவது துணைவிதியின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப் பணம் பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

13. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :

"சபை" என்பது, உடபலாத்த பிரதேச சபையையும் ;

"தலைவர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்.

14. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 1293/9

---

**மத்திய மாகாண மாகாண சபை**

உடபலாத்த பிரதேச சபை

**துணைவிதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (xiv) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2015, பெப்புருவரி 02

நூலகங்கள் பற்றிய துணை விதிகள்

1. இந்தத் துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் பொதுசன நூலகங்கள் பற்றிய துணை விதிகள் என அழைக்கப்படும்.

2. பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிற்குள் வசிக்கும் ஆட்களதும், சமூகக் குழுவினரதும் கல்வி, தகவல் மற்றும் தகவல் மற்றும் தனியாள் அபிவிருத்தியைப் போன்றே வாசிப்புப் பழக்கத்தையும் விருத்தி செய்து, ஆக்கபூர்வமான மற்றும் பொழுதுபோக்குத் தேவைகளை நிறைவு செய்து பல்வேறு ஊடகங்களூடனான வளங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கெனப் பொதுசன நூலகச் சேவையை ஆரம்பித்து நடத்திச் செல்வதுடன், இதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கென இந்தத் துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.

3. சபையின் நிர்வாக எல்லைக்குள் வாழும் மக்களின் தேவைகளுக்கேற்றவாறு பொதுசன நூலகங்கள் பின்வரும் பிரிவுகள் மற்றும் சேவைகளுடன் அல்லது பின்வரும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமையலாம்.

(i) இரவற் பகுதி
(ii) உசாத்துணைப் பகுதி
(iii) சிறுவர் பகுதி
(iv) பருவகாலச் சஞ்சிகைகள், செய்தித்தாள் பகுதி
(v) கட்புல, செவிப்புல மற்றும் தகவற் தொடர்பாடல் தொழினுட்ப பகுதி
(vi) கற்கைப் பகுதி
(vii) நூல் பாதுகாப்பு மற்றும் அரிதான நூல்கள் பகுதி
(viii) விசேட மற்றும் பிரதேசங்கள் சார்ந்த சேகரிப்பு பகுதி
(ix) வலது குறைந்தோருக்கான நூலக சேவைப் பகுதி
(x) சனசமூக தகவற் பகுதி
(xi) புகைப்படப் பிரதி மற்றும் ஏனைய தகவற் சேவைகள் பகுதி

4. பிரதேச சபையின் ஒவ்வொரு பொதுசன நூலகத்துக்குமென நூலகர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படுபவர் பொதுசன நூலகத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவத்தை முறையாக நடத்திச் செல்வது தொடர்பாகப் பிரதேச சபைக்கு வகை கூறுதல் வேண்டும்.

5. (அ) பொதுசன நூலகச் சேவைக்கான ஆலோசனையையும், வழிகாட்டல்களையும் வழங்குவதற்கென, இதன்பின்னர் குழு எனக் குறிப்பிடப்படும் நூலக ஆலோசனைக் குழுவொன்றை நியமித்துக்கொள்ள முடியும். குறித்த குழு பின்வருவோரைக் கொண்டதாக அமையும்.

(i) இதன் பின்னர் இங்கு தலைவர் எனக் குறிப்பிடப்படும் சமகாலத்தின் பிரதேச சபையின் தலைவர்
(ii) பிரதேச சபையின் உறுப்பினர்களிடையே அனைத்துக் குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் ஒரு குழுவுக்கு ஒரு உறுப்பினர் உட்படும் வண்ணம் மூவருக்குக் குறையாத உறுப்பினர்கள்
(iii) நிர்வாகப் பிரதேசத்தின் மக்கள் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு சமயத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு சமயத்துக்கு ஒருவர் என நியமிக்கப்படும் உச்ச எண்ணிக்கையிலான மூவர்
(iv) பொதுச் சபையின்போது பிரதேச சபையினால் தெரிந்தெடுக்கப்படும் பிரதேச நிர்வாகப் பிரிவில் வாழும் சிறப்புப் பிரசைகள் ஐவர்
(v) சமகாலத்தில் நூலகத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் குழுவின் செயலாளராக இருப்பார்.

(ஆ) குழுவின் உறுப்பினர்களது எண்ணிக்கை 15 ஐந் தாண்டாது இருத்தல் வேண்டும்.

(இ) தலைவர் உத்தியோகபூர்வ மட்டத்தில் குழுவின் தலைவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு அமர்வுக்கும் அவர் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனுமொரு கூட்டத்துக்குத் தலைவர் வருகை தராது இருந்தால், இருக்கும் உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவர் உரிய கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

6. கோரமும் உறுப்புரிமை அற்றுப் போதலும்,

(அ) சபை மூலம் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களது எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பங்கினர் கோரம் ஆக அமைதல் வேண்டும் ;

(ஆ) ஏதேனுமொரு கூட்டத்தில் தலைமை தாங்கும் உறுப்பினருக்கு ஒரு அடிப்படை வாக்கும், ஏதும் பிரச்சினைகள் தொடர்பில் சார்பாகவும் எதிராகவும் கிடைக்கும் வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், அதன் தீர்மானிக்கும் வாக்கும் உண்டு ;

(இ) குழுக் கூட்டங்களுக்கு அறிவிக்காமல் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு வருகை தராத காரணத்தை முன்னிட்டு,ஒருவரது உறுப்புரிமையை இல்லாமல் செய்தல் வேண்டும். அத்துடன், மீண்டும் எப்போதும் ஆலோசனைக் குழுவில் அவர்களை நியமித்தல் கூடாது அவ்வாறு உறுப்புரிமை இல்லாது போன உறுப்பினர்களுக்குப் பதிலாகச் சபையின் தீர்மானத்துக்கமைய புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

7.(i) **உறுப்புரிமை**

(அ) நூலகத்தின் இரவற் பிரிவில் உறுப்புரிமை பெறுவதற்கெனப் பின்வரும் தகைமைகள் இருத்தல் வேண்டும்;

(ஆ) பொதுவான உறுப்புரிமையைப் பெறுவதற்கென 14 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். சிறுவர் உறுப்புரிமைக்கென 14 வயதுக்குக் கீழ் 3 வயதுக்கு மேல் இருத்தல் வேண்டும் ;

(இ) சபையின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டோர் அல்லது கல்வி கற்போர் அல்லது சொத்துக்களது உரிமையாளர் அல்லது தொழில் செய்பவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கென கிராம அலுவலரது சான்றிதழையும், கல்வி கற்பவராயின் பாடசாலை அதிபரது சான்றிதழையும், தொழில் செய்பவராக இருப்பின் நிறுவனத் தலைவரது சான்றிதழையும் முன்வைத்து உறுப்புரிமைக்காக விண்ணப்பிக்க முடியும்.

(ii) **பிணையாளர்கள்**

பாராளுமன்ற உறுப்பினர்கள்
மாகாண சபை உறுப்பினர்கள்
பிரதேச சபை உறுப்பினர்கள்
நூலகக் குழுவின் உறுப்பினர்
சமையத் தலைவர்கள்
வைத்தியர்கள், சட்டத்தரணிகள்
சமாதான நீதவான்கள்
நிர்வாகப் பிரிவுக்குள் அமைந்துள்ள பாடசாலையின் அதிபர்
சபையில் பணி புரியும் நிறைவேற்று அலுவலர்
நிர்வாகப் பிரிவின் கிராம அலுவலர்

(iii) **உறுப்புரிமையைப் பெறுதல்**

(அ) நூலகத்தின் உறுப்புரிமையைப் பெறுவதற்காக முதலில் ரூ. 50.00 இற்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். வருடத்துக்கு ஒரு தடவை ரூ. 15.00 செலுத்தி உறுப்பபுரிமையைப் புதுப்பித்தல் வேண்டும். சிறுவர் உறுப்புரிமைக்கென இதன் அரைப்பங்குக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும். உறுப்பினர் கட்டணங்கள் குழுவினரது பரிந்துரையின் கீழ் சபை காலத்துக்குக் காலம் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானிக்கப்பட முடியும்.

8. பொதுவான நிபந்தனைகள்

I. **இரவற் பகுதி**

(i) இந்தத் துணை விதியின் 7 (iii) ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் நூலகர் இரண்டு பிரவேசச் சீட்டுக்களை வழங்குதல் வேண்டும். அவருக்கு ஒரு பிரவேசச் சீட்டுக்கு ஒரு புத்தகம் வீதம் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு ;

(ii) இந்தப் பிரவேச சீட்டுக்களை ஏனையோருக்குக் கைமாற்றம் செய்தல் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது ;

(iii) இரவல் பெறும் புத்தகம் தொடர்பாக வகை சொல்ல உறுப்பினர் கடமைப்பட்டுள்ளார் ;

(iv) இரவல் பெறும் உறுப்புரிமை அட்டை தொலைந்துபோகும் சந்தர்ப்பத்தில் அதுபற்றி உறுப்பினர் உடனடியாக நூலகருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். உரிய அட்டையின்மீது நூலகத்திலிருந்து புத்தகமொன்று வழங்கப்படவில்லையெனின், நூலகர் திருப்திப்படுவாரெனின், அதன் தற்காலிக இணைப் பிரதியொன்றை வழங்க முடியும். அந்த இணைப் பிரதியை வழங்கக் கூடாது ;

(v) அட்டை காணாமற்போய் மீண்டும் வழங்கப்படும்போது சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

(vi) ஒரு உறுப்புரிமை அட்டைக்கென இரவற் பகுதியிலிருந்து பெறப்படும் புத்தகமொன்றை 14 நாட்கள் வைத்துக்கொள்ள அனுமதியுண்டு. அந்தப் புத்தகத்தை வேறெந்த உறுப்பினரும் கேட்டிராத பட்சத்தில், 14 நாட்களுக்கு மேற்படாத காலத்துக்குப் புதுப்பித்து வழங்க நூலகருக்கு முடியும் ;

(vii) இரவலாகக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்ட குறித்த புத்தகத்தில் திருப்பி ஒப்படைக்கவேண்டிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் நூலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். குறித்த தினத்தின் பின்னர் தாமதமாக ஒப்படைக்கப்படும் புத்தகங்களுக்கென உடபலாத்த பிரதேச சபை விதிக்கும் தண்டப் பணத்தைச் செலுத்த உறுப்பினர் கடமைப்பட்டுள்ளார் ;

(viii) இரவலாகக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்ட புத்தகத்தை 30 நாட்களுக்குள் திருப்பித் தராத சந்தர்ப்பத்தில், அப்புத்தகம் அற்றுப்போனதாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ;

(ix) உறுப்பினரொருவர் வெளியில் இரவலாகக் கொண்டு சென்ற புத்தகம் காணாமற் போயுள்ளதென அறிவிக்கப்பட்டால், அப்புத்தகத்தின் பிரதியொன்றைத் திருப்பித் தருதல் வேண்டும். குறித்த புத்தகத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில், அதன் தற்கால சந்தைப் பெறுமதியின் 25 சதவீதத்தை மேலதிகக் கட்டணமாக அறவிட்டுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறான கொடுப்பனவைத் தட்டிக்கழிக்கும்போது, பிணையாளரிடமிருந்து அதனை அறவிட்டுக்கொள்ள ஏற்பாடு செய்தல் வேண்டும் ;

(x) இரவலாகக் கொண்டு செல்லும் புத்தகத்தைச் சேதப்படுத்துவதோ, தாள்களைக் கிழிப்பதோ, கோடுகள் வரைவதோ, ஏதும் எழுதுவதோ அல்லது எந்த விதத்திலேனும் அதனைச் சிதைப்பதோ கூடாது. அவ்வாறு சேதப்படுத்தப்பட்ட புத்தகத்தின் மீது நூலகர் விதிக்கும் நட்டத் தொகையை உறுப்பினர் செலுத்துதல் வேண்டும் ;

(xi) இரவற் பகுதியில் இருந்து புத்தகமொன்றைப் பெற்றுக்கொள்ள முன்னர் அதனைப் பரிசீலித்துப் பார்த்து, புத்தகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சேதம், சிதைவு என்பவற்றை நூலகரிடம் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறு தெரிவிக்காது எடுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு புத்தகமும், சேதங்களிலிருந்தும், சிதைவுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட புத்தகங்களாகவே கருதப்படுதல் வேண்டும்.

(xii) இரவற் பகுதியில் புத்தகங்கள் திருப்பி ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில் புத்தகத்தை மீள வழங்க முடியாத அளவுக்கு அது சேதமாகியுள்ளதென நூலகர் பகிர்ந்துரை செய்யும் தருனத்தில் விதிக்கப்படும் கட்டணத்தை செலுத்தியவுடன் "சேதமாகியதனால் பயன்படுத்தலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது" என்ற முத்திரையை பதித்து அவருக்கு வழங்க முடியும் கட்டணத்தை தீர்மானிக்கும் போது X ஆவது பிரிவின்படி கணிக்கப்படுதல் வேண்டும்.

(xiii) உறுப்பினர் எவரும் நூலகத்திலிருந்து இரவல் வாங்கிச் சென்ற புத்தகத்தை உறுப்பினரல்லாத இன்னுமொருவர் மூலம் நூலகத்துக்கு அனுப்பிவைக்க முடியும். அவருக்குப் புத்தகங்களைக் கொண்டுசெல்ல வழங்கக் கூடாது. அவ்வாறு நிகழ்ந்துள்ளமை பற்றி நூலகருக்குச் சான்றுகள் கிடைத்திருப்பின், உறுப்பினரின் வைப்புத்தொகையையும், உறுப்புரிமையையும் இல்லாது செய்ய முடியும். தொற்றுநோய் அல்லது ஒட்டுநோய் பீடித்த ஒருவர் பயன்படுத்திய புத்தகத்தை நூலகத்துக்குத் திருப்பி ஒப்படைக்கும்போது, அந்தப் புத்தகத்தை அழித்துவிட அல்லது அதன் பெறுமதியின் 25 வீதத்தை மேலதிகக் கட்டணமாக நூலகர் அறவிடுதல் வேண்டும்.

(xiv) இரவல் பெறுவதற்காக ஒரு புத்தகத்தை எந்த உறுப்பினருக்கு வழங்குதல் வேண்டுமென்பதில் கருத்து முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் நூலகர் அந்த முரண்பாட்டைத் தீர்த்து வைப்பார்.

(xv) ஒரு உறுப்பினர் இரவல் பெற்றுச் சென்ற புத்தகத்தை இன்னுமொரு உறுப்பினர் பெற உத்தேசித்திருந்தால், இதுபற்றி அங்கு வைக்கப்பட்டுள்ள ஏட்டில் பதிவு செய்தல் வேண்டும். அந்தப் புத்தகம் நூலகத்தில் திருப்பி ஒப்படைக்கப்பட்ட பின்னர், வேண்டிக்கொண்டவருக்கு அதனை ஒதுக்கித்தர முடியும். இரண்டு அல்லது பல உறுப்பினர்கள் வேண்டிக்கொள்ளும் பட்சத்தில், பதிவேட்டில் பதிந்த ஒழுங்கின்படி இரவலாக வழங்க நூலகர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(xvi) சபை தீர்மானம் மேற்கொள்ளுமெனின், நூலகம் இரவு 8 மணி வரை திறந்திருத்தல் வேண்டும்.

## II. உசாத்துணைப் பகுதி

(அ) 14 வயதுக்கு மேற்பட்ட எழுத, வாசிக்கத் தெரிந்த எவருக்கும் உசாத்துணைப் பகுதியில் புத்தகங்களை வாசிக்க உரிமையுண்டு.

(ஆ) உசாத்துணைப் பிரிவில் புத்தகங்களை வாசிக்க விரும்பும் ஒருவர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி. வாசகர் புத்தகத்தில் பெயர், முகவரியை எழுதிக் கையொப்பத்தை இட்டு நூலகரிடம் அனுமதி பெறுதல் வேண்டும்.

(இ) உசாத்துணைப் பிரிவுக்கு வெற்றுத்தாளைத் தவிர வேறு எதனையும் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது. உசாத்துணைப் பிரிவுக்கு எடுத்துச் செல்ல முடியும் என நூலகர் அனுமதி வழங்கும் பொருட்களை மாத்திரம் கொண்டு செல்ல முடியும்.

(ஈ) உசாத்துணைக்கெனப் பெறும் எந்தப் புத்தகத்தையும், நூலகத்துக்கு வெளியே எடுத்துச் செல்லக் கூடாது.

(உ) உசாத்துணைக்கென வருகை தரும் வாசகரொருவர், உசாத்துணைப் பிரிவுக்கு வெளியே ஏனைய பிரிவுகளிலிருந்து புத்தகம், சஞ்சிகை, ஆவணம், என்பவற்றை வேண்டி நின்றால், உசாத்துணைப் பிரிவின் நூலகரது அனுமதியின் கீழ் அதனை நிறைவேற்ற முடியும்.

(ஊ) பொதுசன நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் உசாத்துணைப் பிரிவும் திறந்துவைக்கப்படுதல் வேண்டும்.

(எ) அனுமதி வழங்கப்பட்டுள்ள ஆவணங்களது பிரதிகளைச் சபை தீர்மானிக்கும் கட்டணத்துக்கும் நூலகரது அனுமதிக்கும் உட்பட்டு, அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## III. சிறுவர் நூலகம்

(அ) இந்தத் துணை விதியின் 5 ஆம் பிரிவுக்கமைய விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய சிறுவர் நூலகத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) சிறுவர் நூலகத்தை திறந்திருக்கும் நேரங்களை நூலக ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் கீழ் பிரதேச சபை தீர்மானிப்பதுடன், குறித்த நேரங்களைத் தெளிவாகத் தென்படும் வண்ணம் அறிவித்தல் பலகையில் தொங்கவிடுதல் வேண்டும்.

(இ) சிறுவர் நூலகங்களுக்குள் (மேற்பார்வை செய்வதற்கான அலுவலர் தவிர்ந்த) உடபலாத்த பிரதேச சபையின் நூலகப் பணியாட்கள் தவிர்ந்த ஏனைய வளர்ந்தோர் நுழைய அனுமதி வழங்கப்படுதல் கூடாது.

## IV. பருவகாலச் சஞ்சிகைகள் பகுதி

(அ) 14 வயதுக்கு மேற்பட்ட எழுத வாசிக்கத் தெரிந்த எவருக்கும் சஞ்சிகைப் பிரிவுக்குள் செல்ல அனுமதியுண்டு.

(ஆ) தமது ஆளடையாளத்தை உறுதி செய்து பதிவேட்டில் பெயர், முகவரியை எழுதிக் கையொப்பமிடுபவரை நூலகர் அனுமதிக்க முடியும். சஞ்சிகைப் பிரிவில் காணப்படும் சஞ்சிகைகள், புத்தகங்கள் அல்லது ஏனைய ஆவணங்கள் என்பன எவற்றையும் வெளியில் கொண்டுசெல்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

(இ) வெளியிலிருந்து எந்த சஞ்சிகையையும், பத்திரிகையையும் கோவையையும், ஏதும் உபகரணங்களையும், பயணப் பைகளையும், உள்ளே கொண்டுசெல்ல முடியாது.

(ஈ) பொதுசன நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் சஞ்சிகைப் பிரிவையும் திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

## V. செய்தித்தாள் பகுதி

(அ) வாசகர்களது வரவுப் பதிவேட்டில் பெயர், முகவரியை எழுதிக் கையொப்பமிடும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் எவரும் இந்தப் பிரிவுக்குச் செல்ல முடியும் ;

(ஆ) நாளாந்த, வாராந்த செய்தித் தாள்கள் இந்தப் பிரிவில் வைக்கப்படுதல் வேண்டும். மேலும், கடந்த ஒரு மாதத்துக்குள் வெளியிடப்பட்ட செய்தித்தாள்கள் மட்டுமே பாதுகாக்கப்படுதல் வேண்டும் ;

(இ) ஒரு மாத காலத்துக்கு அதிகம் கடந்த செய்தித்தாள்கள் இந்தப் பிரிவிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். அவற்றைப் பொருத்தமான நடவடிக்கைக்கெனச் சபையின் களஞ்சியத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் ;

(ஈ) மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் செய்தித்தாள் பகுதி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.45 மணி வரை திறந்திருத்தல் வேண்டும்.

## VI. கட்புல, செவிப்புல, தொடர்பாடல் தொழினுட்பப் பிரிவு

(அ) இந்தத் துணை விதிகளின் 6 ஆவது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய, உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள எவரும் இந்தப் பிரிவைப் பயன்படுத்த முடியும்.

(ஆ) தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி, வரவுப் பதிவேட்டில் பெயர், முகவரியை எழுதிக் கையொப்பமிடும், உடபலாத்த பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டணத்தைச் செலுத்தும் எந்த உறுப்பினருக்கும் நூலகர் அனுமதி வழங்க முடியும்.

(இ) கட்புல, செவிப்புலப் பிரிவில் ஒலிநாடாக்கள், செவிப்புல உபகரணங்கள் என்பவற்றை வளவுக்கு வெளியில் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கக் கூடாது.

(ஈ) பிரதேச சபை விதிக்கும் வைப்புத் தொகையையும் கட்டணத்தையும் செலுத்தும் வாசகருக்கு ஒரு தடவையில் இரண்டு ஒலி நாடாக்களை 14 நாட்களுக்கு வெளியில் எடுத்துச் சென்று பயன்படுத்த அனுமதி வழங்க முடியும்.

(உ) ஒலிநாடாக்களை வழங்கும்போதும், திருப்பிப் பெறும்போதும் வாசகரும் நூலகரும் அவற்றின் செவிப்புலத் தன்மையை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்

(ஊ) சேதமாகிய ஒலிநாடாக்கள் தொடர்பாக வாசகர் அதன் பெறுமதியின் இருமடங்குத் தொகையை நட்டஈடாகச் செலுத்துதல் வேண்டும்.

(எ) தகவல் தொடர்பாடல் மற்றும் தொழினுட்பப் பிரிவைப் பயன்படுத்த நாடும் உறுப்பினர் எவரும் செலுத்த வேண்டிய கட்டணத்தைப் பிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும்.

(ஏ) வெளியிலிருந்து கொண்டுவரப்படும் குறுந்தகடுகள் அல்லது கணினி மென்பொருட்கள் என்பவற்றை இப்பிரிவின் கணினிகளில் இடப்படுவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

(ஐ) மின்னஞ்சல், இணையத்தள வசதிகளைக் கட்டணம் செலுத்தும் எவரும் பெற்றுக்கொள்ள முடியும்.

(ஒ) இப்பிரிவில் பயன்பாட்டுக்கென உள்ள குறுந்தகடுகள் அல்லது கணினி மென்பொருட்கள் என்பவற்றை எவ்வகையிலேனும் பிரதியெடுத்தல் அல்லது வெளியில் கொண்டு செல்லல் என்பவற்றுக்கு அனுமதி இல்லை.

(ஓ) குறுந்தகடுகளின் பிரதிகளைப் பெற எந்த வாசகரும் விரும்பினால், நூலகரது அனுமதியை அவர் பெறுதல் வேண்டும்.

## VII. கேட்போர் கூடம்

1. கல்வி, கலாசார அபிவிருத்திக்கென உரிய மேடை நாடகங்கள், திரைப்படங்கள், விரிவுரைகள், மாநாடுகள், வேலைக்களங்கள், பல்சுவை நிகழ்ச்சிகள், பகிரங்கக் கூட்டமல்லாத அரசியல் மற்றும் தொழிற்சங்கக் கூட்டம், கூட்டங்கள், சமயச் சொற்பொழிவுகள் என்பவற்றுக்கென உடபலாத்த பிரதேச சபையின் கேட்போர் கூடத்தைப் பொருத்தமான விண்ணப்பதாரர்களுக்கென ஒதுக்கித்தர முடியும்.

2. உடபலாத்த பிரதேச சபை விதிக்கும் குறித்த கருமத்துக்கென உள்ள கட்டணத்தையும் வைப்புத்தொகையையும் செலுத்தியதன் பின்னர் முதலில் விண்ணப்பிப்போருக்கு கூடம் ஒதுக்கப்படும்.

3. கேட்போர் கூடம் ஒதுக்கப்பட்ட நாள் தவிர்ந்த வேறொருநாளில் கூடத்தை ஒதுக்கித்தர விண்ணப்பதாரி வேண்டுகோள் விடுத்தால், முன்னர் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வைப்புத் தொகையின் அடிப்படையில் இன்னுமொரு நாளில் ஒதுக்கித்தர முடியும். குறித்த தினத்தை இன்னுமொரு விண்ணப்பதாரி ஒதுக்கியிருப்பின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் முதல் நாளில் மண்டபத்தைப் பயன்படுத்தாத காரணத்தால் கட்டணம் மீளவழங்கப்பட மாட்டாது. வைப்புத்தொகை மட்டும் மீளளிப்புச் செய்யப்பட முடியும்.

4. கேட்போர் கூடத்தை ஒதுக்கித்தரும் அதிகாரம் சபைக்கும், தலைவருக்கும் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கும் சாட்டப்பட்டுள்ளது. நியாயமான காரணத்தைக் கொண்டு ஒதுக்கீட்டை இல்லாது செய்ய முடியும்.

5. கேட்போர் கூடத்தை ஒதுக்கிக் கொண்ட ஒவ்வொரு விண்ணப்பதாரியும்,

(அ) கேட்போர் கூடத்தையும், அதன் சுற்றாடலில் உள்ள உபகரணங்கள், மின்சார உபரணங்கள், கருவிகள் மற்றும் ஏனைய பொருத்துக்களுக்குச் சேதம் விளைவித்தலைத் தவிர்த்தல் ;

(ஆ) அநாகரிகமான, பொருத்தமற்ற, அழுக்கான உடைகளையும், நடத்தைகளையும் கொண்டவர்கள் கேட்போர் கூடத்தினுள் நுழைவதைத் தவிர்த்தல் ;

(இ) குடிபோதையில் இருப்பதையும், மது அருந்துவதையும், புகை பிடித்தலையும் தவிர்த்தல் ;

(ஈ) ஏதும் தொற்றுநோய் அல்லது ஒட்டுநோய் என்பவற்றால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் நோயுற்றிருந்த ஒருவரைப் பராமரித்த எவரையும் கேட்போர் கூடத்துள் நுழைவதைத் தவிர்த்தல் ;

(உ) ஒழுக்கநெறிக்குச் சாதகமாக அமையாத காட்சிகள், சுவரொட்டிகள், படங்கள், சிலைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்தல் ;

(ஊ) கேட்போர் கூடத்துக்கு வருகைதரும் இரசிகர்களது உடைமைகளைப் பாதுகாத்தல் ;

(எ) தலைவரது எழுத்துமூல அனுமதியின்றி நள்ளிரவு 12.00 மணியின் பின்னர் கேட்போர் கூடத்தில் தரித்திருப்பதைத் தவிர்த்தல்.

இவ்வாறான பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன எனத் தலைவருக்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அறிக்கையிட்டாலன்றி, கேட்போர் கூடத்தில் நடத்தப்படும் அல்லது நடைபெறவுள்ள கருமத்தைக் காரணம் காட்டாது மற்றும், வைப்புத்தொகையை மீளளிப்புச் செய்யாது இரத்துச் செய்ய முடியும். மேலும், சேதங்கள், நட்டங்கள் என்பவற்றை அறவிட்டுக்கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்படவும் முடியும்.

VIII. **கிளை நூலகங்கள்**

1. பிரதான நூலகங்களுக்கென உள்ள துணை விதிகள் கிளை நூலகங்களுக்கும் பொருந்தும்.

2. கிளை நூலகங்களது உறுப்புரிமை உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வதிவோருக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

IX. **வாசிப்பு மண்டபங்கள்**

1. பிரதான நூலகத்துக்கு வெளியில் பிரதேச சபையின் மூலம் வட்டார மட்டத்தில் வாசிப்பு மண்பங்கள் அமைக்கப்பட முடியும்.

2. இந்த வாசிப்பு மண்டபங்களில் செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகள் மாத்திரமே வாசகர்களுக்கு வாசிக்க வழங்கப்படும்.

3. உடபலாத்த பிரதேச சபையின் வட்டாரத்துக்குள் வசிப்போரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி, பதிவேட்டில் பெயரையும் முகவரியையும் எழுதிக் கையொப்பமிடுவோருக்கு வாசிப்பு மண்டபங்களைப் பயன்படுத்த முடியும்.

X. **நடமாடும் நூலகங்கள்**

1. பிரதான நூலகத்துக்கோ அல்லது கிளை நூலகங்களுக்கோ வருகைதர முடியாத உறுப்பினர்களுக்கென நடமாடும் நூலகச் சேவையை நடத்த முடியும்.

2. உடபலாத்த பிரதேச சபையினால் நடத்திச் செல்லப்படும் இடமொன்றில் 14 நாட்களுக்கு ஒரு தடவை நடமாடும் நூலக சேவை நடத்தப்படுதல் வேண்டும்.

3. நடமாடும் நூலக சேவை நடத்தப்படும் இடங்களில் அவை நடைபெறும் நேரங்களையும் தினத்தையும் நூலக உறுப்பினர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வண்ணம் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

4. நடமாடும் நூலக சேவையைப் பயன்படுத்துவோருக்குத் தனியான அட்டைகள் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன், பிரதான நூலகத்துக்குப் பொருந்தும் துணை விதிகள் அனைத்தும் நடமாடும் நூலக சேவைக்கும் பொருந்துதல் வேண்டும்.

XI. **கற்கைப் பகுதி**

1. பிரதான நூலகத்துடனும், கிளை நூலகங்களுடனும் இணைந்த கற்கைப் பகுதியொன்றை அமைக்கப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க முடியும்.

2. தமது ஆளடையாளத்தை உறுதி செய்து வரவுப் பதிவேட்டில் பெயரையும் முகவரியையும் எழுதிக் கையொப்பமிடும் நகரை நிரந்தர வதிவிடமாகக் கொண்டுள்ள எவரும் இதனைப் பயன்படுத்த முடியும்.

3. நூலகத்தின் புத்தகங்களையும், பருவகால சஞ்சிகைகளையும், செய்தித்தாள் பிரிவுக்குக் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்படக்கூடாது. வாசகர்களது தனிப்பட்ட கோவைகள், புத்தகங்கள், ஆவணங்கள் போன்ற சஞ்சிகைகள் மட்டுமே கற்கைக்கென வழங்க முடியும்.

4. நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் கற்கைப் பிரிவும் திறக்கப்படுதல் வேண்டும்.

5. தமது சொந்தக் கற்கை நடவடிக்கைகள் தவிர்ந்த வேறெந்தக் கருமத்திலும் அங்கு வருகை தருவோர் ஈடுபடாதிருக்க நூலகர் வழி செய்தல் வேண்டும். நிதமும் நடமாடித் திரிவோர் மற்றும் வேறு கருமங்களில் ஈடுபடுவோரை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

XII. **அரிதான நூல்கள் மற்றும் கிரந்தங்களைப் பாதுகாக்கும் பகுதி**

1. வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த அல்லது பதிப்பில் காணப்படாத அல்லது கொள்வனவு செய்ய முடியாத எந்தத் தலைப்பிலும் எழுதப்பட்ட எந்தப் புத்தகமாயினும் அவற்றைப் பாதுகாப்பதற்கென இப்பிரிவை அமைத்துக்கொள்ள முடியும்.

2. தொல்பொருள் திணைக்களம் அல்லது அருங்காட்சியகத்திடம் ஒப்படைக்க சட்டத்தினால் கட்டுப்பாடு செய்யப்படாத 50 வருடங்களுக்கும் அதிகப் பழைமை வாய்ந்த தற்போது பதிப்பில் இல்லாத மற்றும் விலை கொடுத்து வாங்குவதற்கு இல்லாத நூலகச் சேவை மன்றம் பரிந்துரைத்துள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் என்பன இப்பிரிவில் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

3. நூலகரிடமிருந்து எழுத்துமூல அனுமதியைப் பெற்ற ஆய்வாளர்கள் இந்தப் பகுதியைப் பயன்படுத்த முடியும்.

XIII. **உடல் ஊனமுற்றோருக்கான நூலக சேவைப் பகுதி**

1. பார்வையற்ற தன்மையால் ஊனமுற்ற வாசகருக்கென இந்தப் பிரிவை ஆரம்பிக்க முடியும். பிரெய்லி முறையில் தயாரிக்கப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

2. நூலகத்தின் பாவனைக்கெனப் பொருந்தும் அனைத்து துணை விதிகளும் இப்பிரிவுக்கும் பொருந்தும்.

XIV. **சனசமூக தகவற் சேவைப் பகுதி**

1. உடபலாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் உரிய வரலாற்று, சமூக, பொருளாதார, வர்த்தக, கல்வி அல்லது ஏனைய தகவல்கள் தேவைப்படும் வாசகர்களுக்கு வழங்குதல்.

2. பிரதேச சபையின் துணை விதிகள், சபை அறிக்கைகள், முன்னேற்ற அறிக்கைகள், வரவு செலவு அறிக்கைகள், இறுதிக் கணக்குகள் பகுப்பாய்வு அல்லது உடபலாத்த பிரதேச சபைக்கு உரிய தகவல்களைப் பெற விரும்புவோருக்கு உதவுவதற்கென இப்பிரிவு தாபிக்கப்படுதல் வேண்டும்.

3. தலைவரது அல்லது நூலகரது அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் எவருக்கும் இந்தத் தகவல்களை வழங்க ஏற்பாடு செய்ய முடியும்.

XV. **புகைப்படப் பிரதிப் பகுதி**

1. நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்களுக்குத் தேவைப்படும் புத்தகத்தின் அல்லது சஞ்சிகையின், செய்தித்தாளின் பகுதியைப் பிரதிசெய்யவென இப்பகுதியை அமைக்க முடியும்.

2. உடபலாத்த பிரதேச சபை தீர்மானிக்கும் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், நூலகரது மேற்பார்வையின் கீழ் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

3. ஏதேனும் சந்தர்ப்பங்களின்போது புத்தகமொன்றின், சஞ்சிகையொன்றின் அல்லது செய்தித்தாளொன்றின் பகுதியை மாத்திரமே பிரதி செய்து வழங்க முடிவதுடன், முழுப் புத்தகத்தையோ அல்லது அதனை முழுமையாகவோ பிரதி செய்து வழங்குவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

09. I. நூலகத்துக்குச் சொந்தமான அனைத்துப் பிரிவுக்கும் வருகைதரும் வாசகர்கள் மற்றும் அலுவலர்கள், பணியாட்கள் ஆகியோர் நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் பூரண அமைதியைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

II. நூலகத்துக்குச் சொந்தமான அனைத்துப் பிரிவுகளுக்கும் குடிபோதையில் நுழைதல், நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் அதன் வளவுக்குள் மது அருந்துதல், புகை பிடித்தல், வெற்றிலை சுவைத்தல், சூது விளையாடுதல், ஒருவரோடு ஒருவர் உரையாடுதல், காரணமின்றி நடமாடித் திரிதல், வாசகர்களுக்கும், அலுவலர்களுக்கும் தடை ஏற்படும் விதத்தில் நடந்துகொள்ளல், உறங்குதல், உணவு உட்கொள்ளுதல், பிச்சை எடுத்தல், உதவி கேட்டுத் திரிதல், விரிவுரை செய்தல், விலங்குகளைக் கொண்டு வருதல் போன்ற எதனையும் எவரும் செய்தல் கூடாது.

III. நூலகத்தின் வாசகரொருவர் வெளியிலிருந்து கொண்டு வரும் அனைத்துப் பொருட்களையும், நுழைவாயிலின் அருகில் அமைக்கப்பட்டுள்ள வரவேற்புக் கருமபீடத்தில் ஒப்படைத்து இலக்க அட்டையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். குறித்த பொருட்களை அன்றைய தினத்திலே வாசகர் அகற்றிச் செல்லல் வேண்டும். அன்றை தினம் கடந்த பின்னர் குறித்த பொருட்களின் பேரில் வகை கூறல் இல்லை. இலக்க அட்டை அற்றுப்போகும் சந்தர்ப்பத்தில், பொருட்களது உரிமையை உறுதி செய்த பின்னர் அதனைப் பெற்றுக்கொள்ள வழி செய்யப்பட முடியும். அற்றுப்போன இலக்க அட்டைக்காக உடபலாத்த பிரதேச சபை செலவிட்ட தொகையை வாசகர் செலுத்துதல் வேண்டும். பொருட்களைப் பொறுப்பேற்க முன்னர் பாதுகாப்பு நடவடிக்கையாக அவற்றைப் பரிசோதித்துப் பார்க்க அலுவலர்களுக்கு அதிகாரமுண்டு. அத்துடன், பொருட்களை மீளக் கையளித்த பின்னர் ஏற்படும் குறைபாடுகளுக்கு வகை கூறுதல் இல்லை. பரிசோதனைக்கு எதிர்ப்புத் தெரிவிப்போரது பொருட்களைக் கருமபீடத்தில் பொறுப்பேற்றல் கூடாது. பெறுமதி மிக்க பொருட்கள் மற்றும் பணம் என்பவற்றைக் கருமபீடத்தில் ஒப்படைப்பதை வாசகர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

IV. நூலகம் மூடி வைக்கப்படும் காலத்துக்குள் குறித்த வளவுக்குள் தரித்திருத்தல் ஆகாது. தலைவர் அல்லது நூலகரது அனுமதியைப் பெற்றுள்ள அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் தரித்திருக்க முடியும். இரவு நேரங்களில் தரித்திருக்க எவருக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

V. ஏதும் தொற்றுநோய் அல்லது ஒட்டு நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அவ்வாறான நோயாளிகளைப் பராமரித்த எவரும் நூலக வளவுக்குள் பிரவேசித்தல் கூடாது.

10. இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வது சட்டபூர்வமானதாக அமையும்.

*11.* இந்தத் துணை விதிகளின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி,

"சபை" என்பது, உடபலாத்த பிரதேச சபையையும் ;

"தலைவர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும் ;

"செயலாளர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் செயலாளரையும் ;

"நூலகர்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் நூலகத்தில் நிர்வாகம் செய்வதற்கென அப்பதவிக்கு நியமனம் பெற்றுள்ள ஒருவரையும் ;

"பிரதான நூலகம்" என்பது, உடபலாத்த பிரதேச சபையின் வளவுக்குள் அமைந்துள்ள பொதுசன நூலகத்தையும்,

"குழு" என்பது, நூலக ஆலோசனைக் குழுவையும் குறிப்பிடும்.

*12.* இந்தத் துணை விதிகளில் ஆண்பாற் பெயர்ப் பாவனை அனைத்தும் பெண்பாற் பிரிவினருக்கும் பொருந்தும்.

*13.* இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

*7-1293/10*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.